# பாதுகாப்பின்மை பற்றிய நேரடி உரை



வேதவசனத்தின் வல்லமையால்
உணர்ச்சிப்போராட்டங்களை எதிர்கொள்ளுதல்!

ஜாய்ஸ் மேயர்

*முன்பதிப்பு: எனக்குதவுங்கள் நான் பாதுகாப்பற்றிருக்கிறேன்!*

# பாதுகாப்பின்மை

பற்றிய நேரடி உரை

# பாதுகாப்பின்மை

## பற்றிய நேரடி உரை

வேதவசனத்தின் வல்லமையால்
உணர்ச்சிப்போராட்டங்களை
எதிர்கொள்ளுதல்!


**ஜாய்ஸ்**
**மேயர்**



Joyce Meyer Ministries®
Nanakramguda, Hyderabad - 500 008

Unless otherwise indicated, all Scripture quotations are taken from *The Amplified Bible* (AMP). *The Amplified Bible, Old Testament,* copyright © 1965, 1987 by Zondervan Corporation. *The Amplified New Testament,* copyright © 1954, 1958, 1987 by The Lockman Foundation. Used by permission.

Originally published as *Help Me I'm Insecure*

Copyright © 2014 by Joyce Meyer Ministries - Asia

All rights reserved. No part of this publication may be reproduced, distributed, or transmitted in any form or by any means, or stored in a database or retrieval system, without the prior written permission of Joyce Meyer Ministries - Asia.

Joyce Meyer Ministries - Asia
Nanakramguda,
Hyderabad - 500 008
Phone: +91-40-2300 6777
Website: www.jmmindia.org

Straight Talk on INSECURITY - *Tamil*
*Overcoming Emotional Battles with the Power of God's Word!*

*Printed at:*
Caxton Offset Pvt. Ltd.
Hyderabad - 500 004

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | *முன்னுரை* | vii |
| *பகுதி 1* | ஏற்றுக்கொள்ளப்பட்டது | 1 |
| 1 | குறைவுகளை நீக்கிவிடு | 3 |
| 2 | உள்ளதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள் | 15 |
| 3 | பிறரோடு ஒப்பிட்டு பாராதே | 25 |
| 4 | குறைவுகளை அல்ல நிறைவுகளை நினை | 31 |
| 5 | உங்கள் வரத்தை உபயோகியுங்கள் | 41 |
| 6 | உன்னில் தனிச் சிறப்பு காணப்படும் | 51 |
| 7 | பிறர் கூறும் குறைகளை சமாளித்தல் | 65 |
| 8 | உன்னுடைய தகுதியை நீயே நிதானி | 69 |
| 9 | உன்னைக் குறித்து தாழ்வு மனப்பான்மை கொள்ளாதே | 75 |
| 10 | நம்பிக்கைக்கு உண்மையான ஊற்றை கண்டறி | 79 |
| | முடிவுரை | 91 |

*பகுதி 2* **வேதவசனங்கள்** 93

மனதைரியத்தைப் பற்றிய வேத வசனங்சள் 95

**ஜெபம்**

மனதைரியத்திற்கான ஜெபம் 99

தேவனோடு தனிப்பட்ட உறவை
வைத்துக்கொள்வதற்கான ஜெபம் 101

# முன்னுரை

உனது வாழ்க்கை உனக்கு சலிப்பா யிற்றோ? உனக்கு கொடுக்கப்பட்ட வாழ்க் கையை உன்னால் ஏற்றுக் கொள்ள முடிய வில்லையா? உன்னிடத்தில் உள்ளதைக் கொண்டு உன்னால் சந்தோஷமாக இருக்க முடிகிறதா?

உனக்கு கொடுக்கப்பட்டதை ஏற்றுக் கொள். உனது குறைவுகளை சமாளிக்க கற்றுக் கொள். நமது பெலவீனங்களினிமித்தம் நம்மை நாமே புறக்கணித்துவிடக் கூடாதென்று அவர் விரும்புகிறார். நமது பலவீனங்களைக் குறித்து இயேசு கிறிஸ்து பரிதபிக்கிறார். (எபி. 4:15)

பரிசுத்த ஆவியானவரும் நமது பெலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். (ரோமர் 8:26)

ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார். (1 கொரி. 1:27)

எனது பெலவீனங்களைக் கவனித்து என்னை நான் மதிப்பிட்டால் நான் ஒன்றும் இல்லை. நமது தகுதி நம் செயல்பாட்டில் அல்ல. தேவன் நமக்காக செய்து முடித்ததையே சார்ந்தது.

தேவன் நம் நிலையை அப்படியே ஏற்றுக் கொள்கிறார். ஆனால் சாத்தானோ அதை நாம் உண்மையாகவே விளங்கிக்கொள்ளக் கூடாதென்று அதிகமாகப் பிரயாசப்படுகிறான். சாத்தான் நாம் அடைய வேண்டிய உயர்ந்த நிலையை இன்னும் அடையவில்லை என்று குறை கூறிக்கொண்டே இருப்பான். அவன் நமது குறைவான நிலைமையை ஏற்றுக் கொள்ள விடவே மாட்டான். ஏனென்றால் நாம் அவ்வாறு செய்வோமென்றால், ஏதோ அற்புதமானக் காரியம் நமக்கு நடைபெறத் தொடங்கிவிடும் என்று அவன் அறிந்திருக்கிறான்.

நம்மைக் குறித்து குறைவாக சிந்திப்பது, நமக்கும் தேவனுக்கும் உள்ள உறவை நம்முடைய எல்ல உறவுகளையும் பாதிக்கின்றது - மனிதனிடமும், தேவனிடமும் பாதிக்கிறதால் அது நமது ஜெப வாழ்க்கையையும் பாதிக்கிறது. வேதத்தில் தேவன் நமக்கு கொடுத்திருக்கும் வாக்குத்தத்தங்களின் அடிப்படையில் எல்லா சரியான வார்த்தைகளை உபயோகித்து ஒரு பயனற்ற ஜெபத்தையே நாம் ஜெபித்துக் கொண்டேயிருக்கலாம். நம் ஜெபம் பலன் கொடாமலிருப்பதற்கான ஒரு காரணம் நம்மைக் குறித்து நாம் மிகவும் தவறாக நினைத்துக்கொண்டு, நாம் கேட்டவற்றை தேவன் செய்வார் என்பதை நாம் நம்பாமலிருக்கலாம். நம்மைக் குறித்து குறைவாகவே சிந்திப்பதால், தேவன் நமக்கு நல்லதைச் செய்வார் என்று நம்பமுடியவில்லை. நமது குறைவுகளையும், தோல்விகளையும், பலவீனங்களையும் பற்றி சிந்தித்துக் கொண்டிருப்பதால் தேவன் நமக்கு பெரிய காரியங்களைச் செய்வார் என்று நம்பமுடிய வில்லை.

நாம் தேவனுக்காக சிறப்பான காரியம் செய்தால் தான் அவரது அன்பைப் பெற முடியும் என்று நினைக்கிறோம். அது தவறு.

மக்கள் செயல்களைச் சார்ந்தவர்களாக்வே இருக்கின்றனர். அதிகமாக செய்தால் அதிக அன்பைப் பெற்றுக்கொள்வோம் என்று நாம் கற்றுக்கொண்டிருக்கின்றோம். தேவனுடனான நம் உறவுலும் அதுவே தொடர்கிறது. நாம் அதிகமாக செய்தால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பார், ஆசீர்வதிப்பாரென்று நினைத்துக்கொள்கிறோம். நாம் எல்லா நேரங்களிலும் சரியாக நடந்துக்கொள்ள இயலாததால் நாம் நம் பெலவீனங்களை மேற்கொள்ள முயன்றுக் கொண்டேயிருக்கிறோம். அப்போதுதான் நமக்குத் தேவையானதைக் கொடுக்கத்தக்க அளவுக்கு தேவன் நம்மை நேசிப்பாரென்று நினைக்கின்றோம். நமது தகுதி நாம் செய்து முடித்த காரியங்களைச் சாாந்தது அல்ல. தேவன் நமக்காக செய்து முடித்ததையே சார்ந்தது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் இதை அறிந்து கொள்ள வேண்டும். இதுவே நமது இரட்சிப்பின் அடிப்படைக் கொள்கை. இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலமே நாம் தேவனுடைய பார்வையில் நீதிமான்களாக எண்ணப்படுகிறோம். நமது கிரியைகளினால் நாம் இரட்சிப்பை சம்பாதிக்க முடியாது. அது தேவன் நமக்கு கொடுத்த ஈவு (1 கொரிந்தியர் 1:30; எபேசியர் 2:8) இதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் விசுவாசத்தினால் இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டிருந்தாலும், அவர் செய்த காரியத்தின் மூலமாகவே நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம். பொதுவாகவே, முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவனே இதை தன் வாழ்வில் அப்பியாசப்படுத்துகிறான் கலா 3:3. இந்த மாதிரியான எண்ணங்கள் முரணானவையாக இருப்பதால், நம்முடைய செய்கைகளால் நாம் நீதிமான்களாக்கப் படுகிறோம் என்ற நினைவுகளிலிருந்து நம் மனதை புதிதாக்கிக் கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். நமது கிரியைகளினால் நாம் தேவனைப் பிரியப்படுத்த முடியாது.

தம்மைப் பற்றி உத்தம இருதயத்தோ டிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப் பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது (2 நாளாகமம் 16:9) "தம்மைப் பற்றி உத்தம இருதயத் தோடிருக்கிறவர்கள்" என்பது தேவனுடைய சித்தம் இன்னதென்று அறிந்து அதை விருப்பத்தோடு நிறைவேற்றுதல் ஆகும். அவரை எவ்வளவாக நேசிக்க அறிந்திருக்கிறோமோ அவ்வளவாக நேசிக்கவேண்டும், அவர் விரும்புகிறதை நாம் விரும்பவேண்டும். அவர் சித்தத்தை நாம் செய்ய வேண்டும்.

தேவனுடைய பார்வையில் நாம் நீதிமான் களாகக் காணப்படுவதற்கான காரியத்தை தேவனே நிறைவேற்றி முடித்தார். அதை நாம் நம்ப வேண்டும். தேவன் நம்மில் அன்பாய் இருக்கிறார். அவருடைய சித்தத்தை நிறைவேற்றுபவர்களிடம் அவர் தமது வல்லமையை விளங்கப்பண்ணு கிறார். அவரது அன்பையும், ஆசீர்வாதத்தை யும் நமது கிரியைகள் மூலம் பெற்றுக் கொள்ள முடியாது. ஆனால் நாம் நமது தகுதியின்மையாலே அவரிடம் சென்று நமது தேவைகளை அவரால் சந்திக்கப்பட செய்யலாம் (எபிரெயர் 4:16). "ஆதலால், நாம் இடுக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்." எப்படியிருப்பினும் இன்றைய நம்முடைய வாழ்க்கை முறையானது, தேவன் நமக்காக வைத்திருக்கும் அனைத்தையும் நாம் பெற்றுக்கொள்ளக் கூடிய திறனைப் பாதிக்கின்றது. தேவனுக்கு கீழ்ப்படிந்து அவரை சேவிப்பது அவர் நம்மை தொடர்ந்து ஆசீர்வதிக்கும் ஒரு ஸ்தானத்தில் நம்மை கட்டவிழ்த்து விடுகிறது (நீதி 28:20).

கீழ்ப்படியாமையின் வாழ்க்கை முறையானது தேவன் நம் வாழ்க்கையில் செய்வதை பாதிக்கின்றது. ஏனென்றால் நாம் கெட்ட விதைகளை ஊன்றினால் கெட்ட அறுவடையை அறுப்போம் என்று கலா 6:8ல் வேதம் கூறுகிறது. வேள்டுமென்றே கீழ்ப்படியாமையில் வாழும் மக்கள் தேவன் தங்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்று விரும்புகின்றனர். தேவனுடைய அங்கிகாரத்தை நாம் பெற்றுக்கொள்ளும்படி, தங்கள் பெலவீனங்களை மேற்கொள்ள நாம் எவ்வித முயற்சியும் எடுக்கவேண்டுமென அவர்கள் நினைத்துக் கொண்ணலாம். ஏதோ ஒரு பகுதியில் பெலவீனராக இருப்பதால் பாவம் செய்யலாம் என்று நம்புகின்றனர். உண்மை என்னவென்றால் தேவன் நம் பெலவீனங்கள் மத்தியிலும் உதவுவார். அவற்றை மேற்கொள்ளவும் உதவுவார். அவற்றை மேற்கொள்ள நாமாக போராட வேண்டுமென்ற அவசியம் இல்லை. ஆனால் அவற்றை மேற்கொள்ள முயலவேண்டும்.

தேவன் பவுலிடம், "பெலவீனத்திலே என் பெலன் பூரணமாயிருக்கும்" என்று கூறினார் (1 கொரி 12:9). 2 கொரி 13:4 ...பவுல் ரோமருக்கு கிருபையை செய்தியைப்பற்றி கற்றுக்கொடுத்த போது...

> "ஆகையால் என்ன சொல்லுவோம்? கிருபை
> பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று
> சொல்லுவோமா? கூடாதே. பாவத்திற்கு மரித்த நாம் இனி
> அதிலே எப்படிப் பிழைப்போம்."
>
> ரோமர் 6:1, 2

வேறுவிதமாக கூறவேண்டுமென்றால், நம்மால் எவ்வளவு பாவம் செய்யக் கூடும் என்று பார்க்க வேண்டுமா? ஏனென்றால் பாவ

செய்வதானது தேவன் நமக்கு கிருபையளிக்கும் படியான ஒரு சந்தர்ப்பமா? பவுலின் பிரதியுத்தரமோ பாவத்திற்கு மரித்த நீங்கள் எப்படி பாவம் செய்வீர்களென்பதே!

கிறிஸ்துவுக்குள் அவர்கள் யாரென்பதை போதிப்பதே பவுலின் நோக்கம், தேவன் அவர்களை அங்கீகரித்திருப்பதால் அவர்கள் அங்கீகரிக்கப்பட்டவர்கள் (ரோமர் 6:5-16).

நம்முடைய தகுதி நாம் செய்வதில்லல்ல, நம்மில் இருக்கிறது. நாம் யாராக இருக்கிறோமோ நம் பெலவீனங்களோடும் அவ்வாறு இருக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

படுக்கையிலிருந்து காலை எழும்பும் போதே நம்மை வெறுக்காமல் எழும்புது அருமையான ஒன்று. இல்லையேல் பிசாசு உங்கள் காதில முந்தின நாள் நீங்கள் செய்த தவறுகளை சொல்வான்.

பிசாசின் திட்டமெல்லாம் நம் தகுதியை நம் செயல்களில் வைத்து நம் குற்றம் குறைகளைப் பற்றி யோசிக்க வைத்து வஞ்சிப்பதேயாகும். நம்மைப் பற்றிய தாழ்வு மனப்பான்மையைக் கொண்டிருந்து தேவனுக்காக பிரயோஜனமற்றவர்களாக மாற்றுவதே. தேவனுடைய ஆசீர்வாதத்திற்கு நாம் தகுதியில்லை என்று நினைப்பதால் நாம் நிர்பந்தமாய் வாழ்ந்து எதையும் பெற்றுக்கொள்ளாமலே போய்விடுகிறோம்.

நம்மோடே நாம் சமாதானமாவோமென்றால் மற்றவர்களோடும் நாம் சமாதானமாயிருப்போம். நம்மை நாம் ஏற்றுக்கொள்ள தொடங்கினால் பிறரையும் விரும்புவோம். என்னுடைய தனிப்பட்ட அனுபவத்தின் மூலம் நான் என்னை என்னுடைய குற்றங்கள், குறைகள் மத்தியிலும் ஏற்றுக்கொண்டு, விரும்பினால் பிறரையும் அவ்வாறே ஏற்றுக்கொள்ள முடிகிறதென்பதைக் கண்டுபிடித்தேன்.

நாம் புத்தகத்திலுள்ள வேதாகமத்தை சார்ந்த கொள்கைகளை உங்கள் வாழ்வில் செயல்படுத்துவதால், பாதுகாப்பின்மையை நீங்கள் மேற்கொண்டு, உங்கள் வாழ்க்கைக்கென்று தேவன் கொண்டிருக்கும் ஆச்சரியமான திட்டத்தை நிறைவேற்றுவீர்கள்.

# பகுதி 1

# ஏற்றுக்கொள்ளப்பட்டது

# 1

# குறைவுகளை நீக்கிவிடு

உன்னைக் குறித்து தாழ்வு மனப்பான்மை இல்லாமல், உன்னை நீ அங்கீகரித்துக் கொள்ள வேண்டுமானால், உன்னில் உள்ள குறைகளை உன் வாயினால் அறிக்கை செய்யாதே.

## உன்னில் உள்ள நிறைவுகளைப் பார்:

உங்களிலுள்ள சகல நன்மைகளும் தெரியப் படுகிறதினாலே உம்முடைய விசுவாசத்தின் அந்நியோந்நியம் கிறிஸ்து இயேசுவிக்காகப் பயன்படவேண்டுமென்று வேண்டுதல் செய்கிறேன்.

பிலேமோன் 1:6

கிறிஸ்துவோடு நாம் கொண்டிருக்கும் உறவால் நமக்குண்டான எல்லா நன்மை களைப் பற்றியும் நீ அறிந்து கொள் (பிலமோன் 6வது வசனம்). கிறிஸ்துவில் நமக்குண்டான நன்மைகளைப் பற்றி மட்டும் நாம் அறிக்கை செய்யும்பொழுது நமது விசுவாசம்

பலப்படுகிறது. சாத்தான் நம்மில் உள்ள தீயகாரியங்களை மட்டும் சிந்திக்கச் செய்வான். அப்படியானால் நாம் விசுவாசத்தில் எப்படி பலப்பட முடியும்? கிறிஸ்துவில் நாம் பெற்ற சிலாக்கியங்கள் என்னவென்று சிந்திக்காமல் நாம் எவ்வளவு பரிதாப நிலையில் இருக்கிறோம் என்பதையே சாத்தான் சிந்திக்கச் செய்வான் (வெளி. 12:10) ஏனென்றால் அவன் குற்றஞ்சாட்டுகிறவன் தானே.

சாத்தான், நமது தகுதி நமது கிரியையை சார்ந்து இருக்கிறது என்று கூறி, நமது குறைவுகளை நமக்கு எடுத்துக்காட்டி நாம் எந்த ஒரு நன்மையும் பெற தகுதி இல்லாத வர்கள் என்று நம்ப வைத்துவிடுவான். ஆகவே தான், நமது குறைவுகளை நாம் நமது வாயினால் அறிக்கை செய்யக்கூடாது. கிறிஸ்துவில் நாம் எவ்வளவு சிலாக்கியம் பெற்றவர்கள் என்று நாம் அறிந்து கொள்வோம் என்றால் நமது பரம தகப்பன் நமக்காக ஆயத்தம் செய்த காரியங்கள் விளங்கும். ஆகவே நமது குறைவுகளை சிந்திப்பது பரம தகப்பனை அசட்டை செய்வதாகும். “தூய்மையானது என்று தேவன் கருதுவதை தீட்டாகக் கருதாதே.” (அப்போஸ்தலர் 10:15)

## தேவனது பார்வையில் நாம் நீதிமான்கள்

தேவன் தம்முடைய வார்த்தையிலிருந்து எனக்குக் கொடுத்த முதல் வெளிப்பாடுகளிலொன்று நீதியைப் பற்றியது. “வெளிப்பாடு” என்றால் திடீரென்று ஒரு காரியத்தை அது உங்களில் ஒரு பகுதியாகும் விதத்தில் அறிந்துக் கொள்வீர்கள் என்பதே. அந்த அறிவு உங்கள் மனதில் மட்டுமே இல்லை அது உண்மையோ சரியானதோ என்று உங்கள் மனதை புதுப்பித்துக்கொண்டிருக்க வேண்டுமென்பதில்லை. அது உண்மையென்று அறிந்திருக்கின்றீர்கள்.

கிறிஸ்துவினால், நான் தேவனுடைய பார்வையில் நீதிமான் (2 கொரிந்தியர் 5:21):

என்ற விளங்கிக் கொள்ளுதலைக் கொடுத்தார். தேவன் பாவம் அறியாத கிறிஸ்துவை நமக்காக பாவ நிலையை ஏற்கச் செய்தார். ஆதலால் கிறிஸ்துவினால் தேவனுடைய பார்வையில் நீதிமான்களாகக் கருதப் படுகிறோம். இக்கருத்தை தேவன் இந்த வசனத்தின் மூலம் எனக்கு வெளிப் படுத்தினார். இந்த உண்மை உன் மனதில் எப்பொழுதும் இருக்க வேண்டும். நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.

## நீதி நமக்கு தேவன் கொடுக்கும் ஈவு

நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப்படும். மரித்த நம் ஆண்டவர் இயேசுவை உயிர்த்தெழச் செய்தவர் மீது நம்பிக்கை கொண்டிருக்கிற நம்மை நீதியுள்ளவர்களாக ஏற்றுக் கொள்கிறார்.

ரோமர் 4:24

நீதி என்பது நாம் தேவனுடைய பார்வையில் பாவம் இல்லாதவர்களாக ஏற்றுக் கொள்ளப் படும் நிலை. பாவிகளாகிய நம்மை தேவன் அங்கீகரித்துக் கொள்ள வேண்டுமானால் நாம் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் தேவன் நமக்குச் செய்ததை ஏற்றுக் கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்துவின் இரத்தத் தின் மூலம் நமது பாவங்கள் மன்னிக்கப் பட்டதை சாத்தான் நம்மை

நம்பவிடாமல் நமது பாவங்களையே நமது நினைவில் கொண்டு வந்து நம்மை பாவி என்றே உணரச் செய்வான். கிறிஸ்துவினால் நாம் தேவனுடைய பார்வையில் நீதிமான்கள் என்பதை நமது உள்ளத்தில் உணர்ந்தவர் களாய் நம்மைக் குறித்த குறைவுகளை நாம் மறந்து விட வேண்டும்.

## நமது பேச்சு வசனத்தை சார்ந்தே இருக்க வேண்டும்

நானும் என் கணவர் டேவ்வும் திட்ட மிட்டு, ஜெபத்தில் தரித்து இருந்து டேனியேல் என்ற ஆண் குழந்தையைப் பெற்றோம். அவன் பிறந்த பிறகு என் சரீரத்தில் பலவித மாற்றங்கள் ஏற்பட்டது. எனது எடை சிறிது அதிகமாகிவிட்டது. சரீரம் பருமனானதால் பார்வைக்கு விகாரமாக இருந்தேன். ஆகவே எனக்கு தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டது.

ஒருநாள் காலை என் கணவர் வேலைக்குச் செல்லுமுன், என்னை உற்சாகப்படுத்த முயன்றார். ஆனால் நான் அவரோடு சற்று நிதானமற்றவளாக நடந்து விட்டேன். எங்கள் இரண்டு பேருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

என்னுடைய பின்னனி எதிர்மறையானது, எனக்கு ஒரு எதிர்மறையாக பேசும் வாயும், எதிர்மறையான மனப்பான்மையும் இருந்தது – என்னைப் பற்றியும், எல்லாவற்றைப் பற்றியும்.

என் குறைவுகளையே நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். ஏதாவது தவறு செய்தபொழுதெல்லாம் என்னால் இனி ஒன்றும் நல்ல காரியம் செய்ய முடியாது என்ற முடிவிற்கே வந்து விடுவேன். டேவ் சென்ற பிறகு நான் தனிமையாயிருந்தேன். சாத்தான் என் மனதில் தீய எண்ணங்களைக் கொடுத்தான்.

“ஜாய்ஸ் நீ குறைவுள்ளவள், வேத வசனங்கள் உனக்கு உதவி செய்யாது. நீ இப்படியே உபயோகமற்றவளாகவே இருக்கப் போகிறாய்” என்று சொல்லி என் மனதை அவன் குழப்பமடையச் செய்தான்.

அப்பொழுது தேவன் எனக்கு விளக்கிக் கொடுத்த வேத வசனம் மனதில் உதயமாயிற்று. “இனி கிறிஸ்துவினால் நான் தேவனுடைய பார்வையில் நீதிமான்” அவருடைய இரத்தத்தால் மூடப்பட்டிருக்கிறேன் என்ற வசனத்தை நான் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டேயிருந்தேன். உடனே சாத்தான் அந்த அறையை விட்டே வெளி யேறி விட்டான். இது நான் என்னைப் பற்றி தேவனுடைய வார்த்தையின்படி பேசுவதின் முக்கியத்துவத்தை உணர்ந்துக் கொண்டதின் மூலம் ஒரு பரிசுத்த பயம் என்னுள் வந்தது. நாம் நம்மைக் குறித்து தாழ்வாக எண்ணும்தன்மையைக் கொண்டிருக்கிறோம் என்று வேதம் சொல்கிறது, “மனிதனின் இதய சிந்தனை இளமையிலிருந்து தீமையை உருவாக்குகின்றது” (ஆதியாகமம் 8:21).

நாம் தேவனிடத்தில் திரும்பும் வரைக்கும் இந்த சிந்தனைகள் நம்மை விட்டு நீங்காது. என் உள்ளத்தில் தேவ வசனங்கள் மூலம் தேவன் கிரியை செய்ததினால் இந்தக் குறைவு எண்ணங்களில் இருந்து விடுபட்டேன்.

> அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்.
>
> நீதிமொழிகள் 23:7

உன்னைக் குறித்து தீதாக சிந்தியாமலும், பேசாமலும் இரு. உன்னைக் குறித்து உன் சிந்தனை உன்னில் பெரிய மாறுதலைத் தரும். தேவன் உன்னை நன்றாகப் பயன்படுத்த

வல்லவர். அதற்கு நீ இடம் கொடு. உன் விசுவாச அளவின்படியே உனக்குக் கொடுக்கப்படும்.

## தேவ அன்பு உனக்கு பாதுகாப்பைத் தரும்

தேவன் முதலில் தம்மிடம் அன்பு செலுத்தியதால் நாமும் அவரிடம் அன்பு செலுத்துகிறோம். (1 யோவான் 4:19). தேவன் நம்மிடம் அன்பு செலுத்த நாம் இடம் தராவிட்டால் நாமும் அவரிடம் அன்பு செலுத்த மாட்டோம். நாம் நம்மிலே சமாதான குறைவுள்ளவர்களாகயிருந்தால் நாம் பிறரிடம் அன்பு காட்ட முடியாது. உன்னில் நீ அன்பு கூருவது போல் பிறரிடமும் அன்பு கூரு. (மாற்கு 12:31)

என்று வேதம் கூறுகிறது. எல்லாவற்றிக்கும் மேலாக மக்களுக்கு தனிப்பட்ட தேவனுடைய அன்பின் வெளிப்பாடு தேவை. நம் விசுவாசத்திற்கும், விடுதலைக்கும், பாதுகாப்பின்னை என்ற வடிவில் பயமின்றி ஊழியம் செய்ய தேவையான விசுவாசத்திற்கு நம் மீது தேவன் கொண்டிருக்கும் அன்பு தான் அஸ்திபாரமாக இருக்கிறது. நாம் தேவ அன்புக்காக ஏங்கும் நிலையை தேவன் நம்மில் உருவாக்கி இருக்கிறார். "தேவன் இயேசு கிறிஸ்துவிடம் அன்பு காட்டியது போல் நம் மீதும் அன்பு காட்டுகிறார்" (யோவான் 17:23) என்று வேதம் கூறுகிறது.

மக்கள் தங்களுடைய குறைகளை எவ்வளவு மேற்கொள்கிறார்களோ அதை சார்ந்து தான் தேவனுடனான தங்களுடைய நீதி இருக்கிறதென்று நினைகின்றவர்கள் தங்களுடைய தோல்விகளால் தேவனை களைப்படையச் செய்துவிட்டோமென்று நினைக்கிறார்கள். நாம் தேவனை களைப்படையச் செய்ய இயலாது. அன்பு களைப்படையாது. நாம்

தேவன் நம்மை நேசிக்காமலிருக்கச் செய்ய இயலாது. அன்பானது தேவன் செய்கின்றதொன்றன்று. அவர் அன்பாகவே இருக்கிறார். (1 யோவான் 4:8)

பலவிதமான மக்கள் நம்மை சரியான முறையில் நடத்தாததால் நாம் தாழ்வு மனப் பான்மை கொண்டு நம்மை நாமே குறைத்து மதிப்பிட்டுக் கொள்கிறோம்.

நாம் கிறிஸ்துவினால் மிகவும் அன்பு கூரப்படுகிறோம் என்று அறியாமல் இருப்பதால் தான் நமக்குப் போதிய பாதுகாப்பு இல்லை என நினைக்கிறோம். பிறர் உன்னை நடத்தும் விதத்தைக் கொண்டு உன்னை மதிப்பிடாதே. சாத்தானும் அவர்களோடு சேர்ந்து உன்னைக் குறித்து உனக்கு ஒரு தாழ்வு மனப்பான்மை உண்டாக்கச் செய்து விடுவான். தேவன் நம்மில் அன்பு கூருகிறார் என்பது நமக்குச் சிறந்த பாதுகாப்பைக் கொடுப்பதாக அமைகிறது.

## சாத்தானின் தவறான ஆலோசனை!

உனக்குண்டான தகுதி உன்னைச் சார்ந்திருப்பதிலிருக்கிறது, தேவனால் அல்ல என்று சாத்தான் நமக்கு ஒரு தவறான எண்ணத்தைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறான். மேலும் எனக்கு என்ன நேரிட்டாலும் நான் சமாளித்து விடுவேன் என்று நம்மைக் குறித்த ஒரு மேட்டிமை யான எண்ணத்தையும் சாத்தான் நமக்கு கொடுக்கிறான். தேவனுடைய உதவி நமக்குத் தேவை என்று நாம் கருதினாலும் நமது செயல்கள் அதற்கு இடம் கொடுக்க வில்லை. விசுவாசிகளாகிய நாம் தன்னம்பிக்கையை விட்டு விட்டு தேவன் மேல் நம்பிக்கையை வைக்க வேண்டும். தேவன் மேல் நாம் நம்பிக்கை வைத்தால் தான் அவர் நமக்காக செயல்பட முடியும் என்று வேதம் நமக்கு தெளிவுபடுத்துகிறது.

தேவன் மேல் நம்பிக்கை வைக்காதவர் களிடம், சாத்தான் அவர்களின் குறைவு களைக் காட்டுவதனால் தங்களைத் தாங்களே ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக் கொள்கின்றார்கள். அவர்கள் தங்கள் மேலேயே கோபமாக இருக்கிறார்கள், தங்களைத் தாங்களே வெறுக்கிறார்கள். தாங்கள் உபயோகமற்றலர், மதிப்பற்றவர், அழகற்றவர் என்றெல்லாம் எண்ணிக் கொள்கின்றனர். சிலர் தங்களை குறித்து எண்ணுவதற்கதிகமாக எண்ணிக் கொள்கின்றனர். சிலர் குறைவாக மதிப்பிட்டுக் கொள்கின்றனர். அவர்கள் எந்த நல்ல காரியத்தையும் செய்ய விடாமல் செய்கிறான். சாத்தான் ஒரு பொய்யன் (யோவான் 8:44). அவன் நம்மைக் குறித்த உண்மையையும், தேவன் நமக்கு ஆயத்தம் செய்த காரியங்களையும் அறிய விடாமல் நமது கண்களை குருடாக்கி விட உபயோகிக்கும் ஆயுதம் வஞ்சனையாகும். நாம் நம் வாழ்க்கையை அனுபவிக் காதபடியும், நாம் தேவனுக்காக செயல்படாத படியும் செய்து விடுகிறான்.

ஒரு தடவை கூட்டங்கள் நடத்திய பொழுது தேவன், “அழகின்மையினால் பாதிக்கப்பட்டவர்கள் ஜெபிப்பதற்காக முன்னால் வரும்படி அழைப்புக் கொடு” என்று கூறினார். எனக்கு அது திகைப்பைக் கொடுத்தது. ஏனென்றால் எனது ஊழியத்தில் இவ்விதமாக அழைப்பு கொடுப்பது இதுதான் முதல் தடவை. நான் அவ்விதமாகவே அழைப்புக் கொடுக்கும் போது நல்ல விளைவு இருந்தது. அநேகர் முன் வந்தனர். அதில் அழகாக இருந்த ஒரு பெண்ணிடம், நான், “அழகு இல்லை என்று கருதுபவர்கள் மட்டும் வாருங்கள் என்று அழைப்புக் கொடுத்தேன், இது உனக்கு விளங்கவில்லையா?” என்று

கேட்டேன். அவள் கண்களில் கண்ணீர் நிரம்பியவளாக, “நான் அழகு இல்லாதவளாகவே என்னை நினைத்துக் கொண்டேன்” என்றாள். சாத்தான் இவ்விதமாகவே நம்மை ஏமாற்றுகிறான். அதற்கான ஒரு நல்ல உதாரணம் இது.

## தேவன் நம்மை அங்கீகரிக்கிறார்

நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே
உன்னை அறிந்தேன். நீ கர்ப்பத்திலிருந்து
வெளிப்படுமுன்னே, நான் உன்னை பரிசுத்தம்
பண்ணி, உன்னை ஜாதிகளுக்கு தீர்க்கதரிசியாக
கட்டளை யிட்டேன்

எரேமியா 1:5

தேவன் நம்மை உருவாக்கியபின் நம்மை அறிந்து கொள்ளவில்லை. நாம் உருவாக்கப் படுமுன்னே நம்மை அறிந்து நாம் நிறைவேற்ற வேண்டிய பணியையும் குறித்து வைத்திருக்கிறார்.

தேவன் நம்மை இயேசு கிறிஸ்துவின் மூலம் தமக்குச் சொந்தமான பிள்ளை களாக்கிக் கொள்ள அன்பினால் முன் குறித்து வைத்தார் (எபேசியர் 1:5) பிறர் நம்மீது குறை கண்டுபிடிக்கத் தக்கதாக சந்தர்ப்பம் கிடைப்பதற்கு முன்னரே தேவன் நம்மை ஏற்றுக் கொள்கிறார். தேவன் நம்மை அங்கீகரித்து, ஏற்றுக் கொண்டதால், பிறர் நம்மைக் குறித்து என்ன நினைத்தால் நமக்கு என்ன? நாம் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள். “தேவன் நம் சார்பில் இருக்கும்போது நமக்கு எதிராக இருப்பவர் யார்?” (ரோமர் 8:31)

## பரிபூரணம்: எட்டக்கூடாத தொடரல்

கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம், பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்கு பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்

எபேசியர் 4:29

எனது மகன் டேனி ஒன்பது வயது இருக்கும்போது தன் தந்தையுடன் கோல்ப் விளையாடுவான். அவன் தவறாக விளையாடும்போதெல்லாம் தன்னைக் குறித்து குறைவாக எண்ணி, "ஓ, டேனி நீ எப்பொழுதும் தவறாகத்தான் விளையாடு வாய்! நீ ஒன்றுக்கும் பயனில்லாதவன்" என்று தன்னைக் கடிந்து கொள்வான். சாத்தான் அவனுக்கு அந்த சிறுபிராயத்திலே தன்னைக் குறைவாக நிதானிக்கும் எண்ணத்தைக் கொடுத்து விட்டான். நானும் எனது கணவரும் அப்படிப்பட்ட நேரங்களில் அவனுக்கு, "நீ இவ்விதமாக உன்னைக் குறைத்துக் கூறுவதால் உனக்கும் பயனில்லை, இதைக் கேட்பவர்களுக்கும் பயனில்லை" என்ற அறிவுரை கூறுவோம்.

நாம் நம்மைக் குறித்து குறைவாகப் பேசுவது நமக்கு மனவருத்தத்தைக் கொடுக்கும். இதே போல் நாம் பிறரை குறைத்துக் கூறினால் அது அவர்களுக்கு மன வருத்தத்தை கொடுக்கும். ஆகவே தான் பவுல் எச்சரிப்பாக கூறுகிறார், "பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தாதீர்கள்" (எபேசியர் 4:30) தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் திறனை நாம் பழித்துக் கூறக்கூடாது. உண்மையாகவே, இதுபோன்ற எதிர்மறையானக் காரியம் பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தும். அது நம் ஆவியையும் துக்கப்படுத்தும். நாம் எதிர்மறையாக பேசவோ அல்லது

அவற்றை கேட்கும்படியாகவோ நம்மை உருவாக்கவில்லை. எனவேதான் எதிர்மறையாக பேசுகிறவர்களுடன் இருக்க எவரும் விரும்புவதில்லை.

நீங்கள் மற்றொரு முறை தவறு செய்யும் போது பின்வருமாறு கூறப் பழகுங்கள். “நான் தவறு செய்ததால் வருந்துகிறேன். இது நான் இன்னும் சிறப்பாகச் செய்வதற்கு என்னை பயிற்றுவிக்கும். நான் என்னால் இயன்றவரை நன்றாகச் செய்ததற்காக தேவனைத் துதிக்கிறேன்.” இதனால் கேட்கிற நாமும், பிறரும் உற்சாகமடை கிறார்கள். என்னுடைய தவறுக்கு காரணம் நான் தான் என்று தன் தவறுக்கான பொறுப்பை எதிர்மறையாகவோ ஆக்கினைக்குள்ளாக தன்னை தீர்க்காமலேயே இது மாதிரியான மனப்பான்மையையும், செயலையுமே நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். தன்னுடைய குறையைக் குறைத்தும் நான் பொருட்படுத்தவில்லை.

## வல்லமை உங்கள் வாயிலிருக்கிறது

உங்கள் வார்த்தைகளைக் கொண்டே நீங்கள்
குற்றமற்றவர்களாக கருதப்படுவீர் கள்.

மத்தேயு 12:37

இயேசு கிறிஸ்து போதித்த இந்த வார்த்தைகளின்படி நம்மைக் குறித்து நிறைவான வார்த்தைகளைப் பேசி நமது பாதுகாப்பற்ற தன்மையை மேற்கொள்ளு வோம். உங்களைக் குறித்து குறைவாக அல்ல, நிறைவாகவே பேசி உங்களை நீங்களே ஊக்கப்படுத்திக் கொள்ளுங்கள். உங்களைக் குறித்த நிறைவான வார்த்தை கள் உங்களுக்கும் புது பெலன் கொடுக்கும்.

# இலக்கை நோக்கித் தொடருங்கள்

**அன்பர்களே, இந்நோக்கம் நிறைவேறி விட்டது என நான் எண்ணவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் செய்கிறேன். கடந்ததை மறந்து விட்டு, முன் இருப்பதைக் கண் முன் கொண்டு, பரிசு பெற வேண்டிய இலக்கை நோக்கித் தொடர்ந்து ஓடுகிறேன்.**

பிலிப்பியர் 3:13,14

**நாம் நம்மைக் குறித்து தவறாக பேசுவோம் என்றால், ஆக்கினைக்கு உட்பட்டவர்களைப்போன்று உணருவோம். நாம் முழுமையை அடைந்து விட்டோமோ அல்லது முழுமைக்காக பிரயாசப்படுகிறோமோ என்று தேவன் நம்மைக் குறித்து கவலைப்படுகிறதில்லை. இயேசு கிறிஸ்து உயிருள்ளவராக, என்னோடு பிரயாசப்படுகிறவர் என்ற எண்ணத்தோடு செயல்படுங்கள். நீங்கள் எவ்வளவு பெரிய தவறு செய்தாலும் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் உங்களுக்கு மீட்பு உண்டு.**

# 2

# உள்ளதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்

உனது பாதுகாப்பற்ற தன்மையை மேற்கொள்ள இரண்டாம்வழி என்ன வென்றால் உன்னில் உள்ள நிறைவு களையே சிந்தித்துக் கொண்டிரு.

நம்மை குறித்து நாம் சொல்லும் எதிர்மறையானக் காரியங்கள் எவ்வளவு அழிவுக்கேதுவானதாக இருக்கும் என்பதை கற்றிருக்கிறோம். இப்போது வேதவார்த்தையின்படி நேர்மறையானவற்றை யோசித்து பேசும்போதுள்ள வல்லமையைப் பற்றி பார்போம்.

நம்மைக் குறித்து நாம் கொண்டுள்ள எண்ணங்களும், நாம் பேசும் வார்த்தை களும் அதிக முக்கியமானவைகள். நம்மைக் குறித்த நல்ல காரியங்களையே சிந்தித்து, நல்ல காரியங்களையே பேசுவோமனால் நம்மைக் குறித்து நமக்கும் ஒரு நம்பிக்கை பிறக்கும். அதை கேட்கிற பிறருக்கும் நம்பிக்கை பிறக்கும்.

நம்மைக் குறித்து நமக்கே நம்பிக்கை இல்லையென்றால் நம்மீது பிறருக்கு எப்படி நம்பிக்கை வரும்?

நான் நம்பிக்கையுள்ள மக்களோடு இருக்கும்போது அவர்கள் மேல் நமக்கு நம்பிக்கை ஏற்படும், ஆனால் தன் மேலே நம்பிக்கையில்லாதவர்களுடன் இருக்கும்போது அவர்களை நாம் நம்புவது கடினமாகிவிடுகிறது. இதே கொள்கை நமக்கும் பொருந்தும்.

## ராட்சதர்களா அல்லது வெட்டுக் கிளிகளா?

அங்கே இராட்சதப் பிறவியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப் போல் இருந்தோம். அவர்கள் பார்வைக்கும் அப்படியே இருந்தோம்...

எண்ணாகமம் 13:33

கானான் நாட்டை உளவு பார்க்கும்படி பன்னிரெண்டு பேரை மோசே அனுப்பி னான். இதில் பத்துப்பேர் பாதகமாகவும், இரண்டு பேர் சாதகமாகவும் அறிக்கை சமர்ப்பித்தனர். பாதகமாகச் சொன்ன பத்துப் பேரும் அந்நாட்டில் உள்ள அரக்கர்களைப் பார்த்து பயந்து விட்டார்கள். இவர்கள் தங்களைக் குறித்து என்ன நினைத்தார்களோ அதே போல் பகைவர்களாக அரக்கர்களும் அவர்களை வெட்டுக்கிளிகளைப் போல் கருதினர்.

பத்துப்பேரும் தோல்வியோடு திரும்பி வந்தனர். ஏன்? அவர்களுக்கு அந்த அரக்கர்களை துரத்த திறமையில்லையா? இல்லை! அவர்கள் தங்களைக் குறைவு மனப்பான்மையோடு பார்த்ததுதான்.

## நேர்மறையாக அறிக்கை செய்வதின் வல்லமை

**காலேப் மோசே முன் மக்களை உடனே அமைதிப்படுத்தி, "நாம் உடனடியாகப் போய் நாட்டைப் பிடித்துக் கொள்வோம். ஏனெனில் நாம் அதை எளிதில் வென்றுவிட முடியும்" என்றார்.**

**எண்ணாகமம் 13:30**

தன்னைக் குறித்து நிறைவாக எண்ணின இரண்டு பேரில் ஒருவனாக காலேப்பின் அறிக்கையை இங்கே காண்கிறோம். மிக கலக்கமான சூழ்நிலையின் மத்தியிலிருந்த மக்களுக்கு காலேப் கூறிய பதில் "நாம் அதை எளிதில் வென்றுவிட முடியும்" என்பதாகும். அவன் அவ்வாறு கூறியதற்குக் காரணம் என்ன? "நீங்கள் அந்த நாட்டைக் கைப்பற்றுவீர்கள்" என்று கர்த்தர் கொடுத்த வாக்கை காலேப் நம்பினான். நம்மைக் குறித்த தாழ்வான எண்ணங்களை மேற்கொள்ள, நாம் நம்மைக் குறித்த நிறைவான காரியங்களையே சிந்தித்து, அதைப் பற்றியே பேச வேண்டும்.

நீங்கள் உங்களைக் குறித்து நிறைவான காரியங்களை உங்கள் மனதிலே பேசிப் பழகுங்கள். நீங்கள் தனிமையிலிருக்கும் போதோ அல்லது பிரயாணம் செய்யும் போதோ உங்களில் உள்ள நிறைவான காரியங்களையே வாயால் அறிக்கை செய்து கொண்டே இருங்கள்.

## வேத வசனங்களின் அடிப்படையிலே உங்கள் வார்த்தைகள் அமையட்டும்

**நாமோ கிறிஸ்துவின் மனதைக் கொண்டுள்ளோம்.**

அவருடைய இருதயத் தின் நினைவுகளை பிடித்துக் கொண்டுள் ளோம்.

1 கொரிந்தியர் 2:16

நாம் நம்மைக் குறித்து நேர்மறையாக அறிக்கை செய்ய வேண்டுமென்று கூறும் போது, வேத வசனம் நம்மைப் பற்றி என்ன கூறுகிறதென்பதை நாமும் கூறவேண்டும். உதாரணமாக வேதவசனம் நமக்கு கிறிஸ்துவின் சிந்தை இருக்கிறது என்று கூறுகிறது. எனவே அதை தான் நாமும் நம்மைப் பற்றி கூறவேண்டும்.

வேதாகமமும் நம் வாழ்வில் நாம் ஒரு அழைப்பைப் பெற்றிருக்கிறோம், நாம் ஒவ்வொருவரும் ஒப்புரவாக்குதலின் ஊழியத்தையும், மன்றாட்டின் ஊழியத்தையும் கொண்டிருக்கிறோம் (2 கொரி 5:18-20; 1 தீமோ 2:1-3). அப்படியென்றால் நாமெல்லாரும் மன்றாடுகிறவர்களாக இருக்க வேண்டுமென்ற அர்த்தமில்லை. ஆனால் தேவனால் நாம் அனைவரும் உபயோகப்படுத்தப்பட வேண்டுமென்ற அழைப்பைப் பெற்றிருக்கிறோம் - அதை அவ்வாறு நாம் சொல்ல வேண்டும்.

## வேதத்தை அறிக்கை செய்யுங்கள்

பயமில்லாமல் திருவசனத்தைச் சொல் லும்படி

பிலிப்பியர் 1:14

உனக்காக தேவன் கொடுத்த வாக்குகளை பட்டியல்படுத்தி அறிக்கை செய். உனக்காக வாக்குத்தத்தங்களை வேத வசனங்களை ஆராய்ந்து படிக்கும் போது கண்டுபிடிக்கலாம்.

நான் எனது வாழ்க்கையில் அவ்விதமாக வாக்குத்தத்தங்களை

ஒவ்வொன்றாய் அறிக்கைச் செய்து வந்தேன். ஆனால் அவைகள் என் வாழ்வில் அப்பொழுது நிறைவேறவில்லை.

கிறிஸ்துவுக்குள் நான் தேவனுடைய பார்வையில் நீதிமான், தேவ ஆட்டுக் குட்டியால் நான் பிரித்தெடுக்கப்பட்டு அவர் ஊழியத்திற்காகப் பரிசுத்தமாக்கப்பட்டவன். தேவன் தமது ஊழியத்திற்கு என்னை அழைத்தார். அவருக்காக என்னைப் பயன் படுத்துவார் என்று ஒருநாளில் பல முறை சொல்லுவேன்.

இப்படியான நிறைவான வாக்குத்த தத்தங்களை நான் தினமும் ஆறு மாதங்களாகச் சொல்லி வந்தேன். அது என்னை ஊழியப் பாதையில் கட்டி யெழுப்பினது.

## தேவன் உன் மூலம் பெரிய காரியங்களைச் செய்ய முடியும் என்று நம்பு

நாம் அம்மக்களுக்கு எதிராகப் பேச முடியாது,
ஏனெனில் அவர்கள் நம்மிலும் வலிமை மிக்கவர்கள்.
எண். 13:31

தேவனுக்கு நீங்கள் தேவை. அவர் உனக்குக் கொடுத்த திறமையை உன்னால் உணர முடியவில்லை என்றால் உன்னால் எதையும் சாதிக்க முடியாது. நீ வெளிப்புறமாக நின்றுக் கொண்டு உனக்குப் பதிலாக பிறரை தேவன் எவ்விதமாக உபயோகிக்கிறார் என்று பார்த்து கொண்டிருப்பாய்.

தேவன் ஞானிகளை வெட்கப்படுத்த, மடமை என உலகம் கருதுபவற்றைத் தேர்ந்து கொண்டார். வலியோரை வெட்கப்படுத்த, வலுவற்றவை என உலகம் கருதுபவற்றைச் சேர்த்துகொண்டார்.

எவரும் தேவன் முன் பெருமை பாராட்டாதபடி அவர் இப்படிச் செய்தார். (1 கொரி. 1:27-29)

உன் பலவீனங்கள் தேவனுக்கு ஒரு பொருட்டு அல்ல. உளவு பார்த்தவர்களில் பத்துபேரின் குறை என்னவென்றால் அவர்கள் தேவனைப் பாராதபடி அரக்கர்க ளைப் பார்த்தார்கள். உங்களுடைய வாழ்க்கையில் அரக்கர்கள் குறுக்கிடலாம். நீங்கள் அரக்கர்களைப் பாராமல் தேவனை நோக்கிப் பாருங்கள். அவர் கொடுத்த வாக்குகளை நிறைவேற்ற வல்லவர்.

என் வாழ்விலும் சில அரக்கர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவைகளை நான் பார்க்கவேண்டுமென்ற அவசியம் இல்லை. நான் தேவனை நோக்கிப் பார்க்கவேண்டும். அவர் என்ன செய்வாரென்று சொல்லுகிறாரோ அவற்றை அவர் செய்வார் என்று விசுவாசித்து அவரையே நோக்கிக் கொண்டிருக்க வேண்டும்.

உங்களுக்கும் அதே தான். உங்கள் வாழ்வில் பெரியக் காரியங்களை செய்ய வேண்டுமென்று உங்கள் ஆவி விரும்புகிறது. ஆனால் அந்த உள்ளான மனிதனை உங்கள் எதிர்மறையான மனப்பான்மைகளால், எண்ணங்களால், வார்த்தைகளால் கீழே தள்ளிக் கொண்டேயிருப்பீகளென்றால், தேவன் நீங்கள் சுதந்தரிக்க வேண்டுமென்று இடத்தை அடையக் கூடாமற்போய் விடும்.

## மரித்தவர்களை வாழ்விக்கும் தேவன்

அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக
ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, அவன்தான்
விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்பித்து,
இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல்
அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக

நம்மெல்லாருக்கும் தகப்பனானான்.

ரோமர் 4:17

மரித்தவர்களை வாழ்விப்பவரும், இல்லாததைத் தம் வார்த்தையால் இருக்கச் செய்கிறவருமாகிய தேவன் மீது நம்பிக்கைக் கொண்டான். (ரோமர் 4:17)

தேவனுடைய வார்த்தையின் அடிப்படை யில் செயல்படுதல் பாவம் அல்ல என்று ஆபிரகாம் அறிந்திருந்தான். ஆபிரகாமிற்கு நீ அநேக ஜாதிகளுக்குக் தகப்பனாவாய் என்று வாக்களித்தார். ஆபிரகாமுக்கோ நூறு வயது ஆகிவிட்டது. சாராளுடைய கர்ப்பம் செத்ததைப் போல் ஆற்றலற்றுப் போய்விட்டது. அப்படியானால் இது எப்படி ஆகும்?

ஆனால் நம் தேவன் மரித்தவர்களை வாழ்விப்பவர். இல்லாததைத் தம் வார்த்தையால் இருக்கச் செய்பவர். ஆகவே ஆபிரகாமிற்கு அவர் கொடுத்த வாக்கை நிறைவேற்றினார். இதே அடிப்படையில் நாமும் தேவனின் வாக்கை உறுதியைப் பற்றிக் கொண்டு அதை நம் வாயினால் தினமும் அறிக்கைசெய்ய வேண்டும்.

## தேவனின் வாக்கை அறிக்கை செய்தால் விடை கிடைக்கும்

அப்பொழுது, நீ தேவனுக்கும் மனிதனுக்கும்
உகந்தவனாவாய், அவர்களது நல் எண்ணத்தையும்
பெறுவாய். நீதி. 3:4

என் வாழ்விலும் பெரிய பிரச்சனைகள் வந்தது. ஆனால் எல்லாவற்றிலும் எனக்கு வெற்றி கிடைத்தது. ஏனென்றால் நான்

தேவனின் வாக்குகளை அறிக்கை செய்து கொண்டே இருந்தேன். தேவனின் வாக்குகளை தினமும் என் வாழ்வில் மேன்மைப்படுத்திக் கொண்டே இருந்தேன். தேவன் எனக்கு எல்லாம் வெற்றியாகச் செய்தார்.

எனது சரீரம் பருமனானதால் நான் எனது அழகை இழந்தவனானேன். ஆனால் நான் தினமும் நிலை கண்ணாடி முன் நின்று, நான் தினமும் தேவையானவற் றையே உணர்கிறேன். நான் பார்வைக்கு நேர்த்தியாக இருக்கிறேன். நான் ஆரோக்கியமாக இருக்கிறேன். என் எடை 135 பவுண்டுகள்தான் என்று அறிக்கை செய்தேன். அப்பொழுது நான் சொல்லியபடி ஒன்றும் கண்ணில் காணப்படவில்லை என்றாலும் நான் அவற்றை அறிக்கை யிட்டுக் கொண்டே இருந்தேன். இதை பிறர் முன்னிலையில் பெருமைப்படும்படி செய்யாமல், எனக்கும் தேவனுக்கும் தெரியும்படி அறிக்கையிட்டேன்.

## உன் வார்த்தையின்படியே உன் வாழ்க்கையும் அமையும்

> நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்
> ஒருவன் சொல் தவறாதவனானால்; அவன் பூரண
> புருஷனும், தன் சரீர முழுவதையும் கடிவாளத்தினாலே
> அடக்கிக்கொள்ளக் கூடியவனுமாயிருக்கிறான்.
>
> யாக். 3:2

தேவனின் வாக்குகளை அப்படியே நம்பி அறிக்கை செய்வது விசுவாசிகளின் முக்கிய மான பழக்கமாய் இருக்கவேண்டும். இப்பழக்கத்தை இன்றே ஆரம்பியுங்கள். நான் கிறிஸ்துவில்

தேவனுடைய பார்வையில் நீதிமான். நான் செய்யும் எல்லாக் காரியங்களையும் தேவன் வாய்க்கச் செய்கிறார். எனது தாலந்துளையும், எனது திறமைகளையும் தேவ நாம மகிமைக்காக உபயோகப்படுத்துகிறார். ஆவியின் கனிகள் என்னில் காணப் படுகிறது. நான் அன்பில் நடக்கிறேன். மகிழ்ச்சி என்னில் பொங்கி வழிகிறது. நான் நேர்த்தியாக காட்சியிக்கிறேன். நான் ஆரோக்கியமாக இருக்கிறேன். என்னுடைய எடை எனக்கும் போதுமானதாக இருக்கிறது என்பதையும் சிந்தித்துக் கொண்டிருந்து, அதையே தினமும் அறிக்கைச் செய்யுங்கள். நாம் தேவனுடைய வாக்குகளை நமக்குச் சொந்தமாக்கி அதை அறிக்கை செய்து வந்தால் அவைகளை நம் வாழ்வில் நிறைவேறச் செய்ய தேவன் வல்லவராயிருக்கிறர்.

# 3

# பிறரோடு ஒப்பிட்டு பாராதே

நமது பாதுகாப்பற்ற நிலைமையை மேற்கொள்ள மூன்றாம் வழி, நம்மை பிறரோடு ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. நீ உன்னை முற்றிலும் தேறினவனாகக் கருதலாம். ஆனால் உன்னைவிட சற்று சிறப்பான முறையில் நடந்து கொள்ளும் ஒருவனை நீ பார்த்தால் உனக்கு தாழ்வு மனப்பான்மை வந்துவிடும். ஜெப வாழ்க்கை யிலும் கூட இந்நிலை ஏற்படலாம். உன்னைவிட ஒருவன் கூடுதல் நேரமோ அல்லது சிறந்த முறையில் ஆவியின் நிறைவினால் ஜெபித்தால் நீ உன்னை குறையுள்ளவனாய் தீர்த்துக் கொள்வாய்.

## ஒப்பிட்டுப் பார்த்தால் நம்மேல் ஆக்கினைத் தீர்ப்பு வரும்

> உனக்கு விசுவாசமிருந்தால் அது தேவனுக்கு முன்பாக உன் மட்டும் இருக்கட்டும். நல்லதென்று நிச்சயித்த காரியத்தில் தன்னை குற்றவாளியாக்காதவன் பக்கியவான்.
>
> ரோமர் 14:22

நான் தினமும் அரைமணிநேரம் ஆவியில் நிறைந்து ஜெபத்தில் தேவனோடு உறவாடுவேன். அது எனக்கு மகிழச்சியாக இருந்தது. ஒரு நாள் ஒரு போதகர் தான் தினமும் நான்கு மணி நேரம் ஜெபத்தில் தரித்திருப்பதாகக் கூறினார். அதிலிருந்து என்மேல் எனக்கு ஒரு குற்ற உணர்வு ஏற்பட்டது. நான் தேவனை நேசிக்கக் கூட இல்லையே என்று சந்தேகமும் தோன்றிற்று. எனக்கு ஏன் இந்த நிலை ஏற்பட்டது. நான் என்னை பிறரோடு ஒப்பிட்டுப் பார்த்ததால் தான். ஆகவே நானும் என் போதனைகளில், நான் பிறருக்குச் சொல்ல வேண்டிய காரியங்களில் அதிக ஜாக்கிரதை யுள்ளவளாக இருப்பேன்.

## ஒவ்வொருவருக்கும் ஒரு தனி தன்மை உண்டு

இவைகளிலே கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்கிறவன் தேவனுக்குப் பிரியனும் மனுஷரால் அங்கிகரிக்கப் பட்டவனுமாயிருக்கிறான்.

ரோமர் 14:18

நாம் நம்மை பிறரோடு ஒப்பிட்டு பார்க்கும் வரைக்கும் நம்மில் மனநிறை வோடு இருப்போம். பிறரோடு ஒப்பிடும் போது நம்மேல் நமக்கு குற்ற உணர்வு வருகிறது. நமது ஊழியத்தையும் பிறரோடு ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. நமக்கு இருக்கும் பாடுகளையும், துன்பங்களையும் பிறரோடு ஒப்பிட்டு பார்க்கக்கூடாது. அவன் நன்றாக இருக்கிறானே, எனக்கு ஏன் இந்த பாடு என்று நீ குழம்பக் கூடும். உதாரண மாக ஒரே தெருவில் வசித்த இரண்டு பெண்கள் மறுபடியும் பிறந்த அனுபவம் அடைந்து 10 ஆண்டு களாகிவிட்டது. அவர்கள்

தங்கள் கணவன் மார்கள் மனம் திரும்ப வேண்டும் என்று ஜெபித்து வந்தார்கள். பதில் கிடைக்க வில்லை. ஆனால் மற்றொரு தெருவில் உள்ள ஒரு பெண் மறுபிறப்பு அடைந்து இரண்டு வாரத்திற்குள் அவளது கணவன் மறுபிறப்பு அடைந்துவிட்டான். மேலும் அவன் ஆவியிலும் நிறைந்தவனாய் உலகமெங்கும் பிரசங்கம் பண்ணவும் ஆரம்பித்துவிட்டான்.

## தேவன் தாம் செய்வதை அறிவார்

> உங்களுக்காக நான் வகுத்திருக்கும் திட்டங்கள் எனக்குத் தெரியும் அன்றோ. அவை வளமான எதிர்காலத்தையும் நம்பிக்கையையும் உங்களுக்கு அளிப்பதற் கான நல்வாழ்வின் திட்டங்களே.
>
> ஏரேமியா 29:11

தேவன் ஏற்படுத்திய உங்களுக்கான தனித்திட்டங்களை வைத்திருக்கிறார் என்று நீங்கள் அறியவில்லை என்றால், நீங்கள் பிறநிலைமையைப் பார்த்து, எனக்கு ஏன் இப்படி செய்யப்படவில்லை என்று உங்கள் மேல் நீங்களே குற்றம் சாட்டிக் கொள்வீர்கள். நாங்கள் 10 வருடங்களாக ஜெபித்து வந்தோம் பதில் கிடைக்கவில்லை. ஆனால் இவளுக்கோ இரண்டே வாரத்தில் தேவன் பதில் கொடுத்துவிட்டாரே என்று யோசிப்பீர்கள். என்னிடமும் அநேகர் வந்து நாங்கள் ஒழுங்காக தேவனை ஆராதிக்கி றோம், தசம பாகம் செலுத்துகிறோம், தேவனை உண்மையாக நேசிக்கிறோம் என்றாலும் எங்களை விட மற்றவர்கள் நன்றாயிருக்கிறார்களே ஏன்? என்று கேட்பார்கள். எனக்கு அதற்கான காரணம் தெரியாது. ஆனால் ஒன்று எனக்குத் தெரியும். அதாவது தேவன் தாம் செய்கிற

காரியத்தை நன்று அறிவார். இதை நாம் நம்பும் போது நமக்கு ஆச்சரியப் பிரகாரமாக ஒரு தெளிவு, உள்ளான சமாதானம், சந்தோஷம் நம் வாழ்வில் ஏற்படும்.

## தரிசித்து நடக்காமல், விசுவாசித்து நட

நாம் காண்பவற்றின் அடிப்படையில் அல்ல,
நம்பிக்கையின் அடிப்படையிலேயே வாழ்கிறோம்.
2 கொரி. 5:7

சிலர் அழைப்பினிமித்தம் பிறர் அனுபவியாத அநேகக் காரியங்களைக் கடந்து செல்ல நேரிடுகிறது. நான் எனது ஊழிய ஆரம்ப காலத்தில் ஐந்து ஆண்டுகளாக அனுபவித்த காரியங்கள் மூலம் துன்பப்படுகிற மக்கள் மீது கரிசனை உடையவளாக இருக்கக் கற்றுக் கொண்டேன். அநேக காரியங்களை பிறர் கைகளை வைத்து ஜெபிப்பதால் நாம் பெற்றுக் கொள்ள முடியாது. நமது சொந்த அனுபவங்கள் மூலமே பெற்றுக் கொள்ள முடியாததை அநேக முறை ஏன் ஆண்டவரே எனக்கு இந்த நிலை? நான் உம்மை நம்புகிறேன். ஏன் எனக்கு இது நேரிட வேண்டும்? என்று கதறியிருக்கி றேன். இதன் காரணங்களை நான் உடனே விளங்கிக் கொள்ள முடியாவிட்டாலும் அதன் பின் விளைவுகளை யெல்லாம் நான் பார்த்தபின் அதை விளங்கிக் கொள்வேன். அப்படி விளங்கிக் கொள்ள முடியாவிட்டா லும், நாம் தேவனிடத்தில் நம்பிக்கையுடன் இருக்கும் போது நமது விசுவாசத்தில் அதிகமாக வளர்வோம்.

## ஒப்பிட்டுப்பாராதே, பின்பற்று

பேதுரு எவ்வாறு இணைந்து, தேவனை மாட்சிமைப்

படுத்தப் போகிறார் என்பதை குறிப்பிட்டே அவர் இவ்வாறு சொன்னார். இதைச் சொன்னபின் பேதுருவிடம் என்னைப் பின்பற்றி வா என்றார்.

பேதுரு திரும்பிப்பார்க்கும் போது இயேசுவின் அன்புச் சீடரும் பின்தொடர்கி றார் என்று கண்டார். அவரைக் கண்ட பேதுரு இயேசுவிடம் ஆண்டவரே இவருக்கு என்ன ஆகும்? என்று கேட்டார்.

யோவான் 21:19-21

நமது வரங்களையும், தாலந்துகளையும் பிறரோடு ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. அதேபோல் நமது பாடுகளையும், துன்பங்களையும், பிறரோடு ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது. இயேசு கிறிஸ்து பேதுருவின் மரணம் எவ்விதமாக அமையும் என்று கூறியதைக் கேட்ட பேதுரு, தன்னுடைய நிலையை யோவானின் நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கவும் விரும்பினார். ஆகவே தான் ஆண்டவரே இவன் நிலை என்ன என்று கேட்கிறார். அதற்கு இயேசு பேதுருவிடம் நான் வரும் வரை இவன் இருக்க வேண்டும் என நான் விரும்பினால் உனக்கு என்ன? நீ என்னை பின் தொடர்ந்து வா என்றார். (யோவா 21:22)

இது தான் தேவன் நமக்கும் கொடுக்கும் உத்தரவு. உன் பாடுகளை பிறரோடு ஒப்பிட்டுப் பாராதே. உன் நிலையிலே இயேசுவைப் பின் செல்.

## பிறரின் ஆசீர்வாதங்கள் மீது ஆசை வையாதே

பிறருக்குரியது எதையுமே இச்சியாதே...

யாத் 20:17

உனக்கு கஷ்டங்கள் நேரிடும் பொழுது பிறரைப் பார்த்து ஆண்டவரே எனக்கு மட்டும் ஏன் இந்தப் பாடு? அவர்களெல்லாம் ஆசீர்வாதமாயிருக்க வேதனையைத்தான் கொடுக்கும். ஏனென்றால் அது இச்சையின் அடையாளம்.

உன்னுடைய சகோதரர்களும், சகோதரிகளும் ஆசீர்வதிக்கப்படும்போது அவர்களுக்காக சந்தோஷப்படுங்கள்; அவர்கள் கஷ்ட்டப்படும்போது அவர்களுடன் வேதனையைப் பகிர்ந்துக்கொள்ளுங்கள் (ரோமர் 12:15). உங்களுடன் பிறருடன் ஒப்பிட்டு பாராதே. மாறாக தேவனை நம்பு, அவர் உங்களுக்கென்று ஒரு தனிப்பட்ட, குறிப்பிட்ட திட்டத்தை வைத்திருக்கிறாரென்று நம்புங்கள். உங்கள் வாழ்க்கையில் உங்களுக்கு என்ன நடந்துக் கொண்டிருந்தாலும், அவர் உங்களை விசாரிக்கிறார், எல்லாவற்றையும் உங்கள் நலனுக்கென்று மாற்றியமைக்கிறாரென்ற அறிவில் பாதுகாப்பாயிருங்கள். (1 பேதுரு 5:7; ரோமர் 8:28)

# 4

# குறைவுகளை அல்ல நிறைவுகளை நினை

பாதுகாப்பற்ற நிலையை மேற்கொண்டு, நம்பிக்கை பெற நான்காவது வழி என்ன வென்றால் குறைவுகளை நினைக்காமல், நிறைவுகளையே பற்றி சிந்திப்பது ஆகும்.

## நிறைவுகளை நினை

> நமக்கு அளிக்கப்பட்டுள்ள அருளுக் கேற்ப வெவ்வேறு அருள்கொடைகளைப் பெற்றுள்ளோம். நாம் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு ஏற்றவாறு அதைப் பயன்படுத்த வேண்டும்.
>
> ரோமர் 12:6

மிகவும் புகழ்பெற்ற நடிகையான ஹெலன் ஹெஸி உயரம் 5 அடி மட்டுமே. அவர் இன்னும் 4 அங்குலம் உயரம் இருந்தால் மிகச் சிறந்த மேடை நட்சத்திரமாக திகழுவாள் என்றார்கள்.

அவளால் மேலும் வளர முடியாவிட்டாலும், மேடைகளில் மிக உயரமாக தெரியும்படி தன்னுடைய உடலமைப்பை வைத்துக் கொள்வாள்.

நான் மிகவும் குட்டையாக இருக்கிறேன் என்று அதைக்குறித்து கவலைக்கொள்ளா மல், தனது நடிப்பு திறமையை எவ்விதம் இன்றும் சிறப்பாக்க முடியும் என்பதையே சிந்தித்து வந்தாள். மிக உயரமான இளைஞரில் ஒருவரான ஸ்காட்லாண்டின் இளவரசியாக நடிக்கும் பாக்கியம் அவளுக்கு கிடைத்தது. உன்னில் உள்ள திறமையை கவனி. ஆனால் உன் குறைகளைச் குறித்து சிந்தியாதே.

## தேவன் உன்னை எதற்காக அழைத் தாரோ அதை உன்னால் நிறைவேற்ற முடியும்

என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே
எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு.

பிலிப்பியர் 4:13

சமீபத்தில் ஒரு ஆலயத்தில் ஒரு வாசகத்தைப் பார்த்தேன். அது தேவனை நம்பு, உன்னில் நம்பிக்கை கொள். உன் னால் எதையும் செய்ய முடிய்ம என்பதாக இருந்தது. அது சரி அல்ல. உன்னாலும் என்னாலும் நாம் விரும்புகிற எல்லாக் காரியங்களையும் செய்ய முடியாது. பிறர் செய்கிற எல்லாக் காரியங்களையும் நம்மால் செய்ய முடியாது. ஆனால் தேவன் நமக்கு எதைச் செய்யும்படி அழைத்தாரோ அவை அனைத்தையும் செய்ய முடியும். நாம் எதைச் செய்ய அழைக்கப்பட்டுள்ளோமோ அதைச் செய்ய முடியும். அவர் நாம் எவ்வாறெல்லாம் இருக்கக்கூடும் என்று சொல்கிறாரோ அவ்வாறெல்லாம் இருக்கக்கூடும்.

## தேவன் கொடுத்த வரத்தை விருதா வாக்கி விடாதே

நாம் தேவனின் அருள் பயனற்றுப் போக விடமாட்டேன்.

கலா. 2:21

தேவன் நம்மை விரக்திக்கென்று அழைக்கவில்லை. நாம் தேவனோடு ஒத்துழைப்போமானால் நமக்கு நியமிக்கப்பட்ட காரியத்தை நேர்த்தியாகச் செய்யலாம். ஆனால் மிகவும் உயர்ந்த நிலை அடைய வேண்டும் என்று பெருமிதம் கொண்டு நமது திறமைக்கு மிஞ்சிய காரியங்களில் ஈடுபட்டால் நாம் தோல்வியே சந்திக்க நேரிடும். அதற்காக நாம் தேவனை குறைச் சொல்லக்கூடத் தொடங்கிவிடுவோம்.

## கிறிஸ்துவால் எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பலன் உண்டு

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்து வினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு.

பிலிப்பியர் 4:13

இந்த வசனத்தின் பின்னணியத்தைக் கவனிக்காமல். இந்த வசனத்தை மட்டும் எடுத்துக்கொண்டால் நாம் தவறான கருத்தைப் பெற்றுவிடுவோம். இதற்கு முந்திய இரண்டு வசனங்களில் பவுல் கூறுகிறார் என்பதைப் பார்ப்போம். என்னை விசாரிப்பதற்கு நீங்கள் இப்பொழுது மறுபடியும் மனமலர்ந்தபடியினாலே கர்த்தருக்குள் மிகவும் சந்தோஷப்பட்டேன்;

இப்படிச் செய்ய எண்ணங்கொண்டிருந்தீர்கள், சமயம் மாத்திரம் உங்களுக்கு நேரிடவில்லை.

பிலிப்பு சபையினார் பவுலை பிரியப்படும் படியான காணிக்கையை கொடுத்தனர். அவர் அவர்களைுக்கு நண்பர்களே நீங்கள் என்னை விசாரித்தபடியினாலே நான் சந்தோஷப்படுகிறேன் என்று சொல்லிவிட்டு 11 மற்றும் 12 ஆம் வசனத்தில் நிலையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும். வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும். எவ்விடத்திலும், எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாகவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்.

இதில் பவுல் கூறும் கருத்து என்ன வென்றால் நான் செய்ய நினைத்த காரியத்தைச் செய்ய முடியும் என்பது அல்ல, அவன் எப்படிப்பட்ட சூழ் நிலையிலிருந் தாலும் அதைத் தனக்கு மிகவும் பயனுள்ள தாக ஆக்கிக் கொள்ளும் இரகசியத்தைக் கற்றிருக்கிறேன் என்பதாகும்.

## எல்லாக் காரியமும் செய்ய முடியும் என்பதின் உண்மை

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே
எல்லாவற்றையுங் செய்ய எனக்குப் பெலனுண்டு.

பிலிப்பியர் 4:13

பவுல் இந்த வசனத்தின் மூலம் சொல் லும் உண்மை என்னவென்றால், தேவன் என்னில் கிருபை செய்திருக்கிறார். ஆதலால் கிறிஸ்து எனக்குக் கொடுத்த பெலத்தால் எந்த

சூழ்நிலையிலும் அது குறைவானாலும் சரி அல்லது நிறைவானாலும் சரி, நான் மிக நிறைவோடு இருக்கக் கற்றுக் கொண்டுள்ளேன். எப்படிப்பட்ட சூழ்நிலையில் நான் வாழ நேரிட்டாலும் நான் கிறிஸ்துவின் பெலத்தால் மனநிறை வோடு வாழ்வேன் என்பது தான். பவுல் சொல்வது என்னவெனில் தேவன் என் வாழ்வில் தம் கிரியையை நடப்பித்திருக்கின்றார். எனவே நான் விரும்வும் எதையும் நான் பெற்றிருந்தாலும், இல்லாவிட்டாலும் சமாதானத்துடனிருக்கும் படி கற்றுக் கொண்டேன். என் சூழ்நிலை சிறப்பாக இருந்தாலும், அதை எவ்வாறு சமாளித்து தாழ்மையுடனிருக்கவும் கற்றுக் கொண்டேன். அதை சமாளிக்க தேவையான உள்ளான பெலன் எனக்குள் இருக்கிறது. வேறுபாட்ட சூழ்நிலையையும் என்னை பெலப்டுத்துகிற கிறிஸ்துவினாலே செய்யக் கூடிய பெலன் எனக்கிருக்கிறது.

பிலிப்பியர் 4:13 ஐ மட்டும் தனியே எடுத்துப் பார்போனென்றால், நாம் எந்தநேரம் எப்படி உணர்கிறோமோ, எந்த் இடத்திலும் எதையும் நம்மால் செய்யக் கூடும் என்று நம்புவதாகும். அனால் அது உண்மையன்று. தேவனுடைய சித்ததில் மட்டுமே நம்மால் அபிஷேகத்துடனிருக்க முடியும். நம் வாழ்க் கையிலும் எவ்வளவு கடினமான சூழ்நிலை ஏற்பட்டாலும், அது கிறிஸ்துவின் சித்தத் தின்படியே வந்த ஒரு காரியம் என்று மன நிறைவோடு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

## அபிஷேகத்தில் நிலைத்திரு

நம்மை கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம் பண்ணினவர் தேவனே.

2 கொரி. 1:21

தேவனால் பரிசுத்தமாக்கப்பட்டு, அபிஷேகிக்கப்படாத காரியங்களை நாம் செய்வதினால் குழப்பமடைகிறோம். அப்படியானால் தேவனால் ஏற்படுத்தப்பட்ட காரியம் எது என்று எப்படிக் கண்டு கொள்ளலாம்? தேவனால் நியமிக்கப்பட்ட காரியம் என்றால் அது வேத வசனங்களின் அடிப்படையில் அமையும். மேலும் அது நமக்கு மனநிறைவைக் கொடுக்கும். அப்படியானால் அக்காரியத்தைத் தொடர்ந்து நடத்துங்கள். உங்கள் கடமையை நிறை வேற்றுங்கள். தேவனுடைய வழிநடத்துத லின்படி உங்களால் இயன்ற அளவுக்கு முயற்சி செய்யுங்கள். நீங்கள் என்ன செய்தாலும் அது வாய்க்காமல் போகும் என்றால் அதை நிறைவேற்ற போராடிக் கொண்டிருக்காதீர்கள். அதை தேவ அபிஷேகம் இல்லையெனில் அது வாய்க்காது. சிலர் ஏற்கனவே செத்துப்போன குதிரை மேலேறி பிரயாணம் செய்ய முயன்றுக் கொண்டிருக்கின்றனர். கீழேயிறங்கும் நேரம் இது. உங்களால் நிறைவேற்ற முடியாத காரியத்தை தேவன் பார்த்துக் கொள்வார்.

## தேவனுடைய கையில் விட்டுவிடுங்கள்

சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நில்லுங்கள்.

எபேசியர் 6:13

சகலத்தையும் நீங்கள்செய்து முடித்தப் பின், தேவனுடைய கையில் விட்டுவிடுங் கள். அவர் அந்தக் காரியத்தை நிறைவேற்ற வில்லை என்றால் அது சரியான நேரம் அல்ல, அல்லது அது தேவன் உங்களுக்கு நியமித்தக் காரியம் அல்ல.

அநேகர் என்னிடம் வந்து உங்களைப் போல் நானும் செய்தி கொடுக்க விரும்பு கிறேன். எப்படி ஆரம்பிக்க வேண்டும்?

நீங்கள் எப்படி ஆரம்பித்தீர்கள்? என்று கேட்பார்கள். இதை நீங்கள் இரண்டு அல்லது மூன்று நாட்களில் கற்றுக் கொள்ள முடியாது. உண்மையில் தேவன் உங்களை அழைத்தால், அவரே அதற்கான வாசல் களை திறந்து தருவார். அவரே உங்களை ஆயத்தப்படுத்தி போதிய கிருபைகளை தந்து, உங்களுக்கு ஆதரவாக நின்று அக்காரியத்தை நடத்தித் தருவார். உங்களுக்கும் அக்காரியத்தைச் செய்வதில் மனநிறைவு ஏற்படும்.

## நீங்கள் விரும்புகிற காரியத்தைச் செய்யுங்கள். நீங்கள் செய்கிற காரியத்தை விரும்புங்கள்!

நீங்கள் செய்கிற காரியம் தேவனால் ஏற்படுத்தப்பட்டது என்றால், அதில் எவ்வளவு இடையூறுகள் அசௌரியங்கள் இருந்தாலும் உங்களுக்கு அது பாரமாக இருக்காது.

எங்கள் ஊழியத்திலும் எவ்வளவோ கஷ்டங்களை நாங்கள் சந்திக்க நேரிடும். அது எங்களுக்கு பாரமாகத் தெரியாது. பிரயாணங்களில் சரியாக தூங்க முடியாது. சாப்பாடு வசதி இருக்காது. சரியான ஓய்வு இருக்காது. இவைகளின் மத்தியிலும் நாங்கள் உற்சாகமாக உலகெங்கும் சுற்றி திரிந்து தேவனுடைய ஊழியத்தை நிறை வேற்றுகிறோம். உங்கள் ஊழியத்தில் உங்களுக்கு சலிப்பு ஏற்பட்டால் அது தேவன் உங்களுக்கு கொடுத்த ஊழியம் அல்ல. நீங்கள் ஏதோ ஒன்றை செய்யும்படி தேவன் உங்களை அழைத்திருந்திருப்பாரே என்றால் அதை செய்யும்படி அவர் உங்களுக்கு உதவி செய்வார். எப்போதுமே இது எனக்கு பிடிக்கவில்லை என்று சொல்லிக் கொண்டேயிருப்பீர்கள் என்றால் பின்னர் அதில் ஏதோ தவறிருக்கிறது.

# தேவன் உங்களை உயர்த்துவார்

கிழக்கிலும் மேற்கிலும் வனாந்தரதிசையி
லுமிருந்து ஜெபம் வராது. தேவனே நியாயாதிபதி,
ஒருவனைத் தாழ்த்தி, ஒருவனை உயர்த்துகிறார்.
சங்கீதம் 75:6,7

**உலகில் அநேகர் தங்கள் அலுவலகத் தில் வசிக்கும் பதவியை முழுமனதோடு ஏற்றுக் கொள்வதில்லை. அவர்கள் எப்பொழுதும் உயர்பதவி வகிக்க வேண்டும் என்றே ஆசைப்படுவார்கள். உயர்பதவியை விரும்புவது தவறு அல்ல. ஆனால் அவர்கள் தங்கள் பதவி தேவ சித்தத்தின்படி கிடைக் கப்பட்டது என்று மனநிறைவோடு. உற்சாக மாய் தங்கள் கடமையை நிறைவேற்ற வேண்டும். அப்படி இல்லாமல் தங்கள் விருப்பம் போல் உயர்பதவியை நாடிப் பெற்றுக் கொண்டாலும் அவர்காளல் மனநிறைவோடு இருக்க முடியாது.**

ஏற்றகாலத்திலே தேவன் உங்களை
உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள்
அடங்கியிருங்கள்.
1 பேதுரு 5:6

**நமது உயர்பதவிக்கு நாம் தகுதிப்படும் நேரம் தேவனுக்குத் தெரியும். அப்பொழுது அவர் நமக்காகச் செயல்படுவார். நாம் இருக்கிற நிலையில் நமது கடமையை உண்மையாக நிறைவேற்றினால், நாம் உயர்பதவிக்கு தகுதியான நேரத்தில் நம்மை உயர்த்துவார். அப்பொழுது அது நமக்கு ஆசீர்வாதமாக அமையும். இந்த நம்பிக்கை நமக்கு இருந்தால்நாம் எந்த நிலையில் இருந்தாலும் வருத்தப்படமாட்டோம்.**

## உனது திறமையைக் கவனி

இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்.

1 கொரி. 12:11

அவனவன் திறமைக்குத் தக்கதாக பரிசுத்த ஆவியானவர் தாலந்துகளை பகிர்ந்து கொடுக்கிறார். தேவனுக்கு நாம் ஒரு தாலந்து வைத்திருக்கிறோமோ அல்லது ஐந்து தாலந்து வைத்திருக்கிறோமா என்பது பற்றி கவலை இல்லை. ஆனால் அவைகள் தனக்குரிய தாலந்தை பிறர் நன்மைக்காக உபயோகிக்கா விட்டால் தேவனுக்கு அது பிரியமாக இருக்காது. (மத். 25:14-30)

எண்ணாகம புத்தகத்திலே கானான் நாட்டை உளவு பார்க்கச் சென்ற பன்னிரண்டு பேரில், 10 பேர் அங்கே அரக்கர்கள் இருக்கிறார்கள். ஆகவே அதை வெல்ல முடியாது என்றார் கள். ஆனால் 2 பேர் அங்கே அரக்கர்கள் இருந்தாலும் தேவன் அந்நாட்டை நமக்குத் தந்தால் நாம் எளிதில் கைப்பற்ற முடியும் என்றார்கள். 10 பேர் தங்கள் குறைகளைப் பார்த்தார்கள். ஆனால் 2 பேர் தேவன் தங்களுக்கு கொடுத்த திறமையைப் பார்த்தார்கள். நீங்களும் உங்கள் வாழ்வில் வெற்றி பெற வேண்டுமானால் உங்கள் குறையை அல்ல உங்களுக்கு தேவன் கொடுத்த திறமையான காரியங்களைப் பாருங்கள்.

# 5

# உங்கள் வரத்தை உபயோகியுங்கள்

பாதுகாப்பற்ற நிலைமையை மேற் கொள்ள ஐந்தாவது, உனக்குப் பிரியமான காரியம் எது என்று கண்டுபிடித்து அதை திறம்படச் செய்து, அதையே திரும்ப திரும்ப செய்து கொண்டிருக்க வேண்டும். இதனால் உன்னில் உள்ள திறமை அதிரிக் கிறது. உன் வரத்தை உபயோகிப்பதால் உன் வாழ்வில் பெற்றி கிடைக்கிறது. உன்னைக் குறித்து சிறந்த எண்ணம் உண்டாகிறது.

## உன் வரத்தைக் கண்டுபிடி

ஊழியம் செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும்.

ரோமர் 12:7

போதிக்கும் வரம் பெற்றவன் போதிக்கிற திலும் அதோடு சிறந்த ஆராதனைப் பாடல் நடத்துகிறவராயும் இருக்க வேண்டும் என்று வேதம் சொல்லவில்லை. என்னுடைய வாழ்வில் நான் வேதபாடம் கற்றுக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் பிறர் செய்கிற காரியங்களை செய்ய ஆசைப்பட்டதுண்டு. மற்றவர்கள் என்னென்ன செய்கின்றார்களோ அதையெல்லாம் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டேன். சாத்தானோடு போராடி தடைகளை எல்லாம் நீக்கி கிறிஸ்துவுக்காக அநேக காரியங்களை செய்ய முற்பட்டேன். ஆனால் முடிவில் தேவனுடைய வசனத் தைப் போதித்தால் போதும் என்று திருப்திக் கொண்டேன். எனது பக்கத்து வீட்டு குடும்ப தலைவி வீட்டில் தக்காளி செடிகள் வளர்ப்பதைப் பார்த்து நானும் வளர்க்க முற்பட்டேன். ஆனால் அதிலும் தோல்வி யுற்றேன். பின் என் கணவனுக்கு ஆடைகள் தைத்துக் கொடுப்பதில் ஆர்வம் காட்டினேன். அதிலும் தோல்வியே அடைந்தேன். பக்கத்து வீட்டுக்காரியோடு என்னை ஒப்பிட்டுப் பார்த்து ஒரு இல்லத்தரசியைப் போன்று என்னால் இருக்க முடியாததால் என்னில் ஏதோ தவறு இருக்கிறதென்று நினைத்துக் கொண்டிருந்தேன்.

## திறமையாக செய்ய முடியாத காரியங்களில் தலையிடாதே

ஆண்டவரே வீட்டைக் கட்டவில்லை யெனில்,
அதைக் கட்டுவோரின் உழைப்பு வீணாகும்.

சங். 127:1

உன்னால் திறம்படி செய்ய முடியாத காரியங்களில் நீ நேரம் செலவழிக்க வேண்டாம். உன்னுடைய திறமை என்ன என்று

தேவன் உனக்குக் காட்ட வேண்டும் என்றுகேள். உன்னால் சிறப்பாய் செய்ய முடிந்த காரியத்தையே நீ விருப்பத்தோடு செய்வாய். நாம் விரும்பாத காரியத்தைச் செய்யும்படி தேவன் நம்மை நடத்த மாட்டார். நம்மால் செய்ய முடியாத காரியத்தைச் செய்ய முயற்சிப்பதைவிட நம்மால் சிறப்பாக செய்ய முடிந்த காரியத்தையே செய்வது நல்லது. நாம் சிறப்பாக செய்யும் காரியத்தைச் செய்வது நமக்கு மனநிறைவைக் கொடுக்கும்.

## அபிஷேகத்தை நாடு

நாங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை.

1 யோவான் 2:27

அநேகர் ஊழியத்தில் தாங்கள் அபிஷே கிக்கப்படாத காரியத்தை, பிறர் செய்கிற தால் செய்ய முற்படுகிறார்கள். பிறர் செய்வது போல் தங்களால் திறம்பட செய்ய முடியாததை உணர்கிறார்கள். என்றாலும் பிறர் செய்வதால் தாங்களும் செய்து தோல்வியையே சந்திக்கிறார்கள். நீங்கள் எந்தக் காரியத்திற்காக அபிஷேகம் பெற்றீர்களோ, அதையே செய்யுங்கள். இல்லையெனில் நாம் தொடர்ச்சியாக அழுத்தத்திற்குள்ளாவோம்.

## தேவ கிருபைக்கு மிஞ்சிப் போகாதே

யோவான் பிரதியுத்தரமாக: பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாலொழிய, அவன் ஒன்றையும் பெற்றுக்கொள்ள மாட்டான்.

யோவான் 3:27

ஒருவன் எவ்வளவுப் பெற்றுக் கொள்ளக்கூடும்? எவ்வளவு உரிமையாக்கிக் கொள்ளலாம்? தனக்கென்று எவ்வளவு கொண்டிருக்கலாம்? பரலோகத்திலிருந்து எவ்வளவு கொடுக்கப்படுகிறதோ அவ்வளவே.

ஒருவன் தேவனால் கொடுக்கப்பட்ட அளவே பெற்றுக்கொள்ள முடியும். கிறிஸ்தவர்களாகிய நமக்கு போதுமென்ற மனம் வேண்டும். நாம் அவரை மாதிரி பிரசங்கிக்க முடியவில்லையே, என் சபை அந்த சபையைப்போல் பெரிதாக இல்லையே என்று மனம் நொந்து கொள்ள வேண்டாம். உனக்குக் கொடுக்கப்பட்ட திறமைக்கு தகுந்தவாறு நீ போதித்தால் போதும். நாம் விரும்புவதால் நமக்கு அந்த வரம் கிடைக்காது. பரிசுத்த ஆவியானவரின் சித்தத்திற்குத் தகுந்தாற் போல் நமக்கு வரங்கள் கிடைக்கும். அவர் சித்தப்படி நமக்கு கிடைத்த வரத்தோடு நாம் திருப்தியாக இருக்க வேண்டும். உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள். (எபி. 13:5) நமது பரம பிதாவுக்கு நமக்கு எது சிறந்தது என்று தெரியும். நமக்கு கிடைத்த வரத்திற்காக நாம் பிதாவுக்கு நன்றி செலுத்தி அவர் நாம மகிமைக்காக நமக்குக் கிடைத்த வரத்தைப் பயன்படுத்த வேண்டும்.

## உன் வரத்தை உபயோகி

நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம்
வெவ்வேறான வரங்களுள்ளவர்களான படியினாலே,
நம்மில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற
வரத்தையுடையவன் விசுவாசப் பிரமாணத்துக்
கேற்றதாகச் சொல்லக் கடவன்.

ஊழியம் செய்கிறவன் ஊழியத்திலும்,
போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்தி

சொல்லுகிறவன் புத்தி சொல்லுவதிலும் தரித்திருக்கக்கடவன். பகிர்ந்து கொள்ளு கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக் கடவன்.

ரோமர் 12:6-8

உனது வரம் என்ன என்று கண்டுபிடிப்ப தில்லை. காலத்தை வீணாக்க வேண்டாம். உனக்கு எதில் திறமை இருக்கிறதோ அதையே செய்துக் கொண்டிரு. உற்சாகப்படுத்தும் வரத்தை உடையவர்கள் பிறரை உற்சாகப்படுத்த வேண்டும். ஒரு சபையில் ஆராதனையை நடத்திய ஒரு பெண்ணை நான் நினைவுக் கூருகிறேன். அவள் உற்சாகப்படுத்துகிறவர். நான் என் பிரசங்கத்தை முடித்த பின் அவள் என்னை பின் தொடர்ந்து வந்து எனக்காக ஜெபித்தார். என்னை உற்சாகப்படுத்தினார். நான் என் ஊழியத்தில் மிகவும் களைப்படைந்திருக்கும் போது இத்தகையக் காரியம் என்னை உற்சாகப்படுத்துகிறது. அவர்கள் என்னை எவ்வளவு அதிகமாக விசுவாசிக்கின்றார்களோ அவ்வளவு அதிகமாய் என்னால் உற்சாகமாக செய்ய முடிகிறது. ஆனால் சாத்தான் அவர்களிடம் நீ நன்றாகப் போதனை செய், பெரிய ஆலயத்தைக் கட்டு, போதகராக பணி செய் என்று திசை திருப்பிவிடுவான். ஆனால் உற்சாகப் படுத்தும் வரம் இருந்தால் நீ பிறரை உற்சாகப்படுத்த வேண்டும் என்று தான் வேதம் கூறுகிறது. ஆகவே உன் வரத்தை மாத்திரம் நீ உபயோகி. அது உனக்கும் பிறருக்கும் நன்மையாக இருக்கும்.

## உதவி செய்யும் ஊழியம்

பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்.

ரோமர் 12:8

கிறிஸ்துவின் சரீரத்தில் நீ கொடுக்கிறவனானால், பின் கொடுப்பது உன் கடமை. தேவன் உன்னை கொடுக்கிறவனாக அழைத்திருந்திருப்பாரேயென்றால். அதற்கு தேவையான வழியையும் அவர் கொடுப்பார். பகிர்ந்துக் கொடுக்கிறவன் என்ற பதம் உதவி செய்கிறவர்களைக் குறிக்கிறது. கிறிஸ்துவின் சரீரத்தில் வேலையாட்கள் என்று அழைக்கப்படுகிறவர்கள் அநேகர், அவர்களின் வேலை ஊழியத்தில் உதவி செய்வதே. அதுதான் உன்னுடைய அழைப்பாக, அபிஷேகமாக இருக்குமென்றால், அதை உன் முழு பலத்தோடும் செய். ஏனென்றால் அது அதிமுக்கியம். சிலர் நான் சும்மா உதவிதான் செய்கிறேன் என்று கூறுகிறார்கள். இல்லை அவர்கள் சும்மா உதவி செய்யவில்லை, பெரிய ஊழியம் செய்கின்றனர். அதைக் குறித்து வருத்தப்படாதே, தாழ்வாக எண்ணாதே. ஏனென்றால் அது பரிசுத்த ஆவியானவரின் ஊழியமாகும்.

ஊழியத்தைத் தாங்குவதற்கு, கொடுக்கி றவர்களும், உதவி செய்கிறவர்களும் தேவை. தலைமை வகிப்பவர்களை தேவன் வல்லமையாக அபிஷேகிக்கிறார். தலை மையாக இருப்பவர்களுக்கு உதவி செய்து அவர்களை ஊழியத்தில் தாங்குவதற்கு அநேகரை கொடுப்பவர்களாகவும், உதவிக்காரராகவும் தேவன் அழைக்கிறார். ஊழியம் சிறப்பாய் நடைபெறுவதற்கு இப்படிக் கொடுப்பவர்களும், உதவிக் காரரும், தலைமையாயிருப்பவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

## பரிசுத்த ஆவியானவர் உதவி செய்கிறவராயிருக்கிறார்

நான் பிதாவை வேண்டிக் கொள்வேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படி

சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.

யோவான் 14:16

உதவி செய்கிற ஊழியமானது மிகப்பெரிய. அற்புதமான, ஆச்சரியமான, வல்லமையான ஊழியமாகும். உதவி செய்கின்ற ஊழியத்திலிருக்க பரிசுத்த ஆவியானவர், ஒவ்வொரு விசுவாசிகளுக்கும் உதவும்படி அவர்கள் அருகிலேயே நடந்து செல்கின்றார்.

ஊழியத்திற்கு பரிசுத்த ஆவியானவர் உதவியாளராக இருந்து ஒவ்வொருவருக்கும் தேவையான அனைத்து உதவிகளையும் செய்கிறார். ஊழிய வளர்ச்சிக்கு பரிசுத்த ஆவியானவரின் உதவி மிகவும் அவசியம்.

## இருக்கிற இடத்தில் ஆசீர்வாதமாயிரு

இரக்கஞ் செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்.

ரோமர் 12:8

தேவன் நமக்குக் கொடுத்த வரங்களினால், நாம் பிறருக்கு உதவி செய்ய விரும்புகிறோம். அது சமைப்பதற்கான வரமாயிருந்தாலும் அதுவும் ஊழியத்திற்கு உதவியாகத்தான் இருக்கும். எனக்கு ஒரு தாயார் ஒரு நாள் சூப் தயார் செய்து கொடுத்தார்கள். அது எனக்கு மிகவும் பிரியமாக இருந்தது. இப்படிச் சின்ன சின்ன காரியத்திலும் கூட நாம் பிறருக்கு உதவியாக இருக்கலாம். நாம் எத்தனைதரம் ஆசீர்வாதமாக இராதபடி பிசாசு நம்மை ஏமாற்றியிருக்கிறான்? நீங்கள் செய்யத்தக்க மிகப்பெரிதான காரியம் ஆசீர்வாதமாக இருப்பது தான். உங்கள்

வரம் என்ன என்பதை கண்டறிவதை விட்டுவிட்டு உங்களுக்கு செய்யப் பிடித்ததை செய்யத் தொடங்குங்கள்.

பிறரை உற்சாகப்படுத்த வேண்டுமென்பது உங்களுக்கு பிடிக்குமே என்றால் அவர்களை உற்சாகப்படுத்துங்கள். கொடுக்க விரும்புர்வீர்களென்றால் கொடுங்கள், உதவி செய்ய விரும்புவீர்களென்றால் உதவுங்கள்.

## உன் வரத்தை தூண்டி எழுப்பு

> உனக்கு உண்டான தேவ வரத்தை நீ அனல் மூட்டி எழுப்பிவிடு.
>
> 2 தீமோ. 1:6

அநேக நாட்கள் சாத்தான் உங்களிடம் இன்று நீ சிறப்பாக ஒரு காரியமும் செய்யவில்லை என்று கூறுவான். அதனால் சோர்ந்து போகாதிருங்கள் நீங்கள் பிறரைப் பார்த்து புன்முறுவல் செய்தாலே அது அவர்களுக்கு புது உற்சாகத்தைக் கொடுக்கும். உன்னில் உள்ள பாதுகாப்பற்ற தன்மையை நீ மேற்கொள்ள வேண்டு மானால் உன்னில் உள்ள தேவ வரத்தை நீ உபயோகித்துப் பழகு. உனக்குக் கொடுக் கப்பட்ட வரம் சிறியதாக இருந்தாலும் அதை உபயோகி. உன்னிடத்தில் என்ன இருக்கிறதோ, அதைக் கொண்டு உன்னால் என்ன செய்யக் கூடுமோ அதைச் செய். சோம்பல்படாதே. நீ செய்கிறது சிறிய காரியமானாலும் அது பிறருக்கு நன்மையாகவே இருக்கும்.

அப்பவுல் தீமோதேயுவிடம் அவனுக்குள்ளிருந்த வரத்தை அனல்மூட்டி எழுப்பிவிடுமாறு கூறுகிறார். அது நம் அனைவருக்கும் ஒரு நல்ல அறிவுரையாகும். சில சமயம் நாம் நம்முடைய வரத்தை நோக்கத்தோடே எழுப்பிவிட வேண்டும்.

உபயோகமற்ற, பாதுகாப்பற்ற உணர்வை மேற்கொள்ள வேண்டுமென்றால் உங்கள் வரத்தை தூண்டிவிடுங்கள். தேவன் உங்களுக்குள் வைத்திருப்பதை உபயோகிக்கத் தொடங்குங்கள். உங்களுக்கிருப்பதைக் கொண்டு உங்களாலியன்றதை செய்வதில் மும்முரமாக இருங்கள். உங்களுக்கு விருப்பமானதை செய்யுங்கள். பின்னர் மீண்டும் மீண்டுமாக செய்யுங்கள்.

# 6

# உன்னில் தனிச் சிறப்பு காணப்படும்

உன்னிலே உள்ள தனிச் சிறப்பை தைரியமாக வெளிக்காட்டுவதின் மூலம் உனது பாதுகாப்பற்ற தன்மையை நீ மேற்கொள்ளலாம். நம் ஒவ்வொருவருக்குமே தனி சிறப்பு இருந்தாலும் நாம் பிறரைப் போல் இருக்க விரும்புகிறோம். அதனால் தான் சந்தோஷமற்றுக் காணப்படுகின்றோம்.

## பிறரைப் போல் இருக்க விரும்பாதே

இப்போழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே.

கலா. 1:10

உன்னுடைய வாழ்வில் நீ வெற்றிக் காண வேண்டுமானால் நீ பிறரைப் போல் இல்லாமல் உன்னில் ஒரு தனி வித்தியாசம் காணப்பட வேண்டும். மனிதரையா? அல்லது தேவனையா? யாரைப் பிரியப்படுத்த நீ விரும்புகிறாய்? பவுலைப் போல இந்தக் கேள்விகளை உன் வாழ்வில் நீ கேட்டுப்பார்.

## மனிதரையா? தேவனையா? யாரை பிரியப்படுத்துகிறாய்?

மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ் செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்.

எபேசியர் 6:6

மனிதரைப் பிரியப்படுத்துவது மிக எளிதான காரியம். விசுவாசிகளாகிய நமக்கு மனிதரின் பாராட்டுகளை விட தேவன் நம்மேல் கொண்டுள்ள கருத்தே முக்கியம். தேவன் நம் மீது அன்பு பாராட்டியதால் தான் நாம் சிறப்பானவர்களாயிருக்கிறோம். பிறர் விரும்புவதை நாம் செய்வோமென்றால் நாம் மனிதரைப் பிரியப்படுத்துகிறவர்களாவோம். இதனால் னற்றவர்களின் அங்கீகாரம் நமக்கு கிடைக்குமென்று நினைக்கிறோம். மனிதருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர் ளாக பார்வைக்கு ஊழியஞ் செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியத்தை மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள் (எபே. 6:6) என்று பவுல் நமக்கு அறிவுரை கூறுகிறார்.

## பிறர் உன்னை ஆண்டுகொள்ள விடாதே

**உக்கிராணக்காரன் உண்மை உள்ளவ னென்று காணப்படுவது அவனுக்கு அவசியம்.**

**ஆயினும் நான் உங்களாலேயாவது மனுஷருடைய நியாய நாளின் விசாரணை யினாலேயாவது தீர்ப்பைப் பெறுவது எனக்கு மிகவும் அற்ப காரியமாயிருக்கிறது நானும் என்னைக் குறித்து தீர்ப்புச் சொல்லுகிறது சரியல்ல.**

1 கொரி. 4:2,3

மற்றவர் கருத்தைப் பற்றியோ நம் கருத்தைப் பற்றியோ நாம் கவலைப் படாமலிருப்பது நம்மை விடுவிக்கும் ஒரு மனப்பான்மை.

மக்கள் தன்னைப் பற்றி என்ன நினைப்பார்களென்று இயேசு நினைத்திருந்திருப்பாரேயென்றால் எவ்வளவு தூரம் சென்றிருப்பாரென்று நினைக்கிறீர்கள்? தம்மைதாமே வெறுமையாக்கினாரென்று பிலிப்பியர் 2:7ல் இயேசுவைப் பற்றி கூறுகிறது.

கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாகிய நாம், ஆவியினாலே நடத்தப்பட வேண்டும். மனிதர்கள் நம்மை ஆண்டு கொள்ளக் கூடாது. அதே போல் நாம் பிறரையும் தேவ ஆவியால் வழிநடத்தப்பட விட்டு விட வேண்டும்.

## அன்பில் நடவுங்கள்

**கிறிஸ்து நம்மில் அன்பு கூர்ந்தது போல, நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள்.**

எபே. 5:2

நாம் நம்மிலே சிறப்பாக நடந்து கொள்ள வேண்டும். பிறர் நம்மைக்குறித்து கூறும் வார்த்தைகளைப் பொருட்படுத்தக் கூடாது. பிறர் நம் மீது கொண்டுள்ள எண்ணங்களுக் காக பயந்து நாம் பிறர் விருப்பத்தின்படி நடக்கக் கூடாது. ஆனாலும் நாம் அன்பிலே தான் நடக்க வேண்டும். நாம் என்ன செய்ய நினைக்கிறோமோ எப்போ செய்ய நினைக்கிறோமோ அதை செய்யக் கூடாது. "யாருக்கு பிடிக்கலையோ அது அவர்கள் பிரச்சனை" என்று சொல்லக் கூடாது. அன்பு அவ்வாறு நடந்துக்கொள்ளாது.

## ஒத்துப் போக வேண்டாம், ஆனால் மறுரூபமாகுங்கள்

**நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந் தரியாமல், தேவனுடைய நன்மை யும் பிரியமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.**

ரோமர் 12:2

உலகம் நம்மை அதற்கேற்றார் போல மாற்ற முயற்சித்துக் கொண்டிருக்கிறது. "உலகம்" என்றால் நாம் தினனும் சமாளிப்பது, அது குடும்பமோ, நண்பர்களோ, மக்களோ, சபையோ எதுவாக வேண்டுமென்றாலும் இருக்கலாம்.

நாம் நம்மை சுற்றியுள்ள மக்களைப் போல் ஆகாமல் நம் நிலையில் உறுதியாக இருக்க வேண்டும். பிறர் நம்மை அவர்கள் வழிக்கு மாற்ற முற்படுவார்கள். ஆனால் நாம் அதற்கு இடம் கொடுக்கக்கூடாது.

வெரு சில மக்கள் மட்டுமே தாங்கள் யாராக இருக்கிறார்களோ அப்படி இருக்கவும் பிறர் பிறாக இருக்கவும் அனுமதிக்கிறார்கள்.

உலகிலுள்ள அனைவரும் அப்படி செய்வார்களென்றால் உலகம் எவ்வளவு நன்றாக இருக்குமென்று கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? நாம் மற்றவர்போல இருக்க அவசியம் இல்லை.

## வித்தியாசமானவராக இருங்கள் – புதுமையை செய்கிறவர்களாக இருங்கள்

இதோ நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்,
இப்பொழுதே அது தோன்றும், நீங்கள் அதை
அறியீர்களா? நான் வனாந்தரத்திலே வழியையும்,
அவாந்தர வெளியிலே ஆறுளையும் உண்டாக்குவேன்.
ஏசாயா 43:19

மார்டின் லூத்தர் போன்றவர்கள், மக்கள் போகும் வழியை விட்டு வெளியே வந்து பெரிய காரியங்களை சாதித்திருக்கிறார்கள். யோவான் ஸ்நானகன், பவுல், இயேசு கிறிஸ்து இவர்களும் தங்கள் தனி தன்மையிலே இருந்து உலகத்தைக் கலக்குகிறவர்களானார்கள். அவர்கள் உலகத்திற்கு வேறுபட்டவர்களாக இருந்து உலகத்தை மாற்றி அமைத்தார்கள்.

எரேமியா தான் சிறபிள்ளையாய் இருக்கிறேன் என்று கூறினார். தீமோத்தேயும் அப்படிதான் கூறினார். உன் இளமையைக் குறித்து வருந்தாதே. தேவன் உன்னை அழைத்து, அபிஷேகித்திருக்கிறார். அதையே நோக்கு என்று பவுல் அவனை உற்சாகப்படுத்தினார்.

யோவான் ஸ்நானகன், பவுல், இயேசுவும் கூட வித்தியாசமானவராக இருக்க தைரியமற்று இருந்திருப்பார்களென்றால் என்னவாயிருக்கும்? வேதத்திலுள்ள பெரிய பெண்களும், ஆண்களும் புதியக் காரியம் செய்து

வித்தியாசமானவர்களாக இருந்தனர். அதற்கான விலைக் கிரயத்தை அவர்கள் செலுத்த வேண்டியிருந்தது.

## ஆவியின் கனி உங்களில் கிரியை செய்யட்டும்

ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக் கம் இவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை.

கலா. 5:22,23

நாம் புதுமைப்படைப்பாளிகளாக, வித்தியாசமானவர்களாக இருக்க வேண்டுமென்று தீர்மானித்தாலுங்கூட நாம் ஆவியின் கனியில் தான் கிரியை செய்ய வேண்டியிருக்கிறோம்.

ஆவியின் கனியின் வெளிபாட்டினாலே உலகத்தை நாம் மாற்றி அமைக்க வேண்டும். தேவன் நம் மூலமாக உலகத்தில் உள்ள குறைபாடுகளை நீக்கி புதிய சமுதாயத்தை உருவாக்குவார்.

## தேவன் நம்மை உபயோகிக்க உருவாக்குகிறார்

அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது, பர்னபாவையும் நான் அழைத்த ஊழியத்துக் காக அவர்களை பிரித்து விடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார்.

அப். 13:2

ஆவியானவர் தம் பிள்ளைகளின் பலவீனங்களின் மத்தியிலும் அவர்களை உபயோகித்து பூமியில் வல்லமையான காரியங்களைச் செய்கிறார். அதே சமயத்தில் சாத்தான் தனது சேனைகளின் மூலம் தேவனுடைய பிள்ளைகளை உலகத்திற்கு ஒத்து போகச் செய்ய பிரயாசப்படுகிறான். ஆகவே நாம் உலகத்திற்கு ஒத்துப் போகாமல் உலகம் நம்பக்கமாக வரப் பிரயாசப்பட வேண்டும்.

நாம் பிரபலமானவர்களாக வேண்டுமென்று விரும்புவோமென்றால்,நம் வாழ்க்கைக்கான தேவனுடைய சித்தத்தை இழந்துவிடுவோம்.

## தேவனுடைய அழைப்பை ஏற்றுக் கொள்

யாரை நான் அனுப்புவேன்,யார் நமது காரியமாய் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான் இதோ, அடியேன் இருக்கிறேன். என்னை அனுப்பும் என்றேன்.

ஏசாயா 6:8

என்னுடைய வாழ்வில் தேவனின் அழைப்பிற்கு இடம் கொடாமல் என் விருப்பப்படி வீட்டிலே குடும்பத் தலைவியாக இருந்து தக்காளி செடிகளை வளர்த்தும், கணவருக்கு ஆடைகளைத் தைத்தும் காலத்தைக் கழித்திருந்தால் இப்பொழுது ஒன்றுக்கும் உதவாதவளாகப் போயிருப்பேன். இதை உங்களுக்கென்று இன்று எடுத்துக் கொள்ளுங்கள். எங்கள் சபையில் இருக்கிறவர்கள், தேவன் எங்களுக்கு கற்றுக் கொடுத்த தெய்வீகசுகம், ஆவியின் அபிஷேகம், ஆவியின் வரங்கள் ஆகியவற்றை பெற்றுக் கொள்ளாததால் நாங்கள்

அச்சபையிலிருந்து வெளியேறி தேவன் எங்களுக்கு காண்பித்த பாதையில் சென்றோம்.

## வெற்றிகரமாக வெளிவருவீர்கள்

இயேசு பிரதியுத்தரமாக: என்னிமித்த மாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும், வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரியையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையி லே துன்பங்களோடே கூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரி களையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்.

மாற்கு 10:29,30

நாங்கள் வெளியே வந்தபிறகு தனிமையில் அவதிப்பட்டோம். ஆனால் இப்பொழுது முன்பைவிட அநேக நண்பர்கள் உண்டு.

தேவன் உன்னை அழைக்கும் பொழுது, உலகம் தன்னோடு ஒத்துப் போகச் சொல்லும், தேவனுக்காகத் தீர்மானம் எடு. உனக்கு சோதனைகள் வரும். அநேகப் பிரச்சனைகள் வரும். ஆனால் இவைகளை யெல்லாம் தாண்டி வெளியே வரும் போது வெற்றி உன் பக்கம். உலகம் உன்னைப் பகைத்தாலும், தேவனுடைய ஆதரவு உனக்கு உறுதுணையாக இருக்கும்.

## மனிதரை அல்ல தேவனை பிரியப்படுத்து

நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன்.

லூக். 3:22

இவ்விதமாக பிதா கூறியது இயேசு கிறிஸ்துவுக்கு ஆறுதலாக இருந்திருக்கும். ஆனால் இதுவரைக்கும் அவரை அறிந்துக் கொண்டு அவரைப் பின் தொடர்ந்தது வெகு சிலரே. பவுலும் தன் வாழ்க்கையில் உலகத்தோடு இசைந்து சென்றிருந்தால் சாத்தான் அவனை மேற்கொண்டிருப்பான். பவுலிடம் நீ ஊழியம் செய்வதற்கு உன் தகுதி என்ன என்று கேட்டவர்களுக்கு அவன் கூறிய பதில் இனிமேல் ஒருவனும் எனக்கு வருத்தம் உண்டாக்காதிருப்பானாக, கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடை யாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறேன் (கலா. 6:17) என்பதுதான்.

## உன் திட்டத்தில் நில்

ராஜா, தான் உண்ணும் போஜனத்தி லேயும் தான் குடிக்கும் திராட்சரசத்திலேயும் தினம் ஒரு பங்கை அவர்களுக்கு நியமித்து, அவர்களை மூன்று வருஷம் வளர்க்கவும், அதின் முடிவிலே அவர்கள் ராஜாவுக்கு முன்பாக நிற்கும்படி செய்யவும் கட்டளையிட்டான்.

தானி. 1:5

யூதா நாட்டின் வீழ்ச்சிக்குப்பின் பாபிலோனிய மன்னன் நேபுகாத்நேச்சார், சில எபிரேய வாலிபர்களைக் கொண்டு வந்து அவர்களுக்கு தன் நாட்டின் கலாச்சாரத்தைப் பயிற்றுவித்தான்.

ஆனால் அவர்களில் ஒருவனாகிய தானியேல், ராஜாவின் போஜனத்தினாலும் தன்னை தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணினான். (தானி. 1:8)

தானியேல் தான் மனிதரை அல்ல. தேவனையே பிரியப்படுத்துவேன் என்று தீர்மானித்தான். அவன் ராஜாவின் திட்டத்திற்கு ஒத்துப் போக மறுத்தான். அவன் தன் நிலையிலே உறுதியாக இருந்து தேவனைப் பிரியப்படுத்தினதால் தேவன் அவனுக்கு ராஜாவின் கண்களில் கிருபை கிடைக்கப்பண்ணினார்.

## ராஜ்யத்தில் உயர்த்தப்பட்டான்

> பின்பு ராஜா தானியேலைப் பெரிய வனாக்கி,
> அவனுக்கு அநேகம் சிறந்த வெகுமதிகளைக்
> கொடுத்து, அவனைப் பாபிலோன் மாகாணம்
> முழுவதுக்கும் அதிபதியாகவும், பாபிலோனிலுள்ள சகல
> ஞானிகளின் மேலும் பிரதான அதிகாரி யாகவும்
> நியமித்தான்.
>
> தானி. 2:48

தானியேல் சோதனைகளை கடக்க நேரிட்டது. ராஜா, தானியேலைதன் நிலைக்கு மாற்றவிரும்பினான். ஆனால் ராஜா தானியேலை உயர்த்தி தன் இராஜ்யத்தின் அதிபதியாக்கினான்.

இதே போல் என் வாழ்விலும் நேரிட்டது. நான் ஒரு புத்தகக்கடையில் வேலை பார்த்த போது என்னுடைய மேல் அதிகாரி தவறான கணக்கை எழுதும்படி சொன்னார். ஆனால் நான் அதற்கு இணங்கவில்லை. முடிவில் அந்த கடையில் இரண்டாம் நிலை அதிகாரியாக உயர்த்தப்பட்டேன். நான்

உலகத்தோடு ஒத்துப்போகாமல் என் நிலையிலே இருந்ததால் எனக்கு இந்த உயர்வு கிடைத்தது. நீங்களும் இவ்விதமாக தரம் குறைந்த நிலைக்கு ஒத்துப் போகாமல், உங்கள் நிலையிலே உறுதியாக இருந்தால் உயர்வு கிடைக்கும்.

## தேவனுக்குக் கீழ்படி

நேபுகாத்நேச்சார் அவர்களை நோக்கி, சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ என்பவர்களே, நீங்கள் என் தேவர்களுக்கு ஆராதனை செய்யாமலும் நான் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்ளாமலும் இருந்தது மெய்தானா?

தானி. 3:14

இதே அரசன் ஒரு புது சட்டத்தைக் கொண்டு வந்து நான் நிறுத்தின பொற் சிலையை வணங்காதவர்களை எரிகிற அக்கினி சூளையிலே போடுவேன் என்று கூறினான். சாத்ராக், மேஷாக், ஆபேத்நே கோ ஆகிய மூவரும் தானியேலிடம் இருந்த அதே ஆவியைப் பெற்றிருந்ததினால் பொற்சிலையை வணங்காமல் உறுதியாக இருந்தனர். ராஜா அவர்களை எரிகிற அக்கினி சூளையில் போடுவேன் என்று பயமுறுத்தினான்.

இதே போல் உலகமும் இன்று நம்மை பயமுறுத்துகிறது என்றாலும் நாம் இழிவான நிலைக்கு நம்மை மாற்றிக் கொள்ளக்கூடாது. அப்போதுதான் நாம் அந்த எபிரேயர்கள் செய்ததுபோல தேவனை நம்ப வேண்டும்.

## தேவனை நம்பு

நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத்

தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்.

விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்ல. நீர் நிறுத்தின பொற்சிலை யைப் பணிந்துகொள்வது மில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக் கடவது என்றார்கள்.

தானி. 3:16-18

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவிடம் காணப்பட்ட நல்ல காரியம் என்ன? பயப்படவோ, பயமுறுத்தப்படவோ தங்களை அனுமதிக்காதது உலக நிலைக்கு தங்களை மாற்றிக் கொள்ளாதது தான். அவர்கள் ராஜாவிடம் நாங்கள் நம்பும் எங்கள் தேவன் எங்களை தப்புவிப்பார். அவர் தப்புவிக்காவிட்டாலும், நாங்கள் உம் வழியில் வரமாட்டோம். எங்கள் தேவன் சொல்வதைதான் நாங்கள் கேட்போம். எங்களுக்கு என்ன நேர்ந்தாலும் அதைக் குறித்து கவலை இல்லை, எங்களுக்கு சமாதானம் இருக்கிறது என்றார்கள்.

இதே போல் நாமும் நம் வாழ்வுக்கான தேவனுடைய சித்தம் இதுதான் என்று நாம் அறிந்திருப்பதை செய்யாதபடி நம்மை அழுத்தத்திற்குட்படுத்துபவரிடம் நாம் கொண்டிருக்க வேண்டும்.

## தேவன் சொன்னதைச் செய்

தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்ட தென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள் ளேபோய், தன் மேல் அறையிலே

எருசலே முக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்.

தானி. 6:10

இங்கே மற்றொரு அரசன் ஒரு சட்டம் கொண்டு வருகிறான். அதன்படி யாரும் அரசனை தவிர வேறுயாரிடமும் ஜெபம் செய்யக் கூடாது. மீறினால் சிங்கங்களிடம் போடப்பட வேண்டும். இதை அறிந்த போதிலும் தானியேல் தான் தினமும் செய்து வந்தபடி ஜன்னல்களை திறந்து வைத்து எருசலேமுக்கு எதிராக இருந்து தன் தேவனை நோக்கி ஜெபம் பண்ணினான்.

இந்த நிலை நமக்கு வந்தால், நாம் ஒரு வேளை யாரும் பார்க்கக் கூடாது என்று நினைத்து ஜன்னல்களை அடைத்துக் கொண்டு மறைந்திருந்து ஜெபிப்போம் அல்லவா? அப்படி செய்தால் அது தேவனையும், மனிதரையும் பிரியப்படுத்த செய்த காரியம் ஆகும்.

தேவனுடைய சித்தத்தின்படி செய்யும் போது, நமக்கு எதிர்ப்புகள் வரலாம் என்றாலும் நாம் தேவனின் சித்தத்திற்கே கீழ்படிந்து நடக்க வேண்டும்.

## தைரியமாக தனித்துநில்

தரியுவின் ராஜ்யபார காலத்திலும், பெர்சியனாகிய கோரேசுடைய ராஜ்யபார காலத்திலும் தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது.

தானி. 6:28

**ஒவ்வொரு தடவையும் தானியேல் தனித்து நின்றான். அவன் பிறரோடு ஒத்துப்போகவில்லை. அவன் தேவனுக்காக உறுதியாக நின்றான். தேவன் அவனை உயர்த்தினார்.**

**தானியேலைப் போல் தனித்து நிற்க முயற்சி செய். அது உன் வாழ்க்கையை மாற்றும். தேவன் உங்களை உயர்த்துவார்.**

# 7

# பிறர் கூறும் குறைகளை சமாளித்தல்

**பாதுகாப்பற்ற தன்மையை மேற்கொள்ள ஏழாவது வழி, நாம் பிறர் கூறும் குறைகளை கவனிக்கக் கூடாது.**

## பரிசுத்த ஆவியால் நடத்தப்படு

நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை. அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது. அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக.

1 யோவான் 2:27

உன்னை நீயே சீர்தூக்கிப் பார்க்கிறாயா? அல்லது பிறர் உன்னை சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமா? உன்னை நீயே சீர்தூக்கிப் பார்த்தல் என்பது உன்னுடைய பல காரியங்களை நீயே நிதானித்து, பரிசுத்த ஆவியானவர் உன்னை நடத்துகிற வழியில் நீயே நடப்பது ஆகும்.

ஒரு முறை என் வீட்டை திரும்பவும் வர்ணங்கள் பூசி அழகுபடுத்த விரும்பி னேன். நான் பல வர்ணங்களின் மாதிரிகளை வாங்கிப் பார்த்து சிறந்த வர்ணத்தைத் தேர்ந்தெடுத்தேன். எனது நண்பர்களின் அபிப்பிராயத்தையும் கேட்போம் என்று அவர்களிடமும் கேட்டேன். ஆனால் ஒருவரும் நான் தேர்ந்தெடுத்த வர்ணத்தை விரும்ப வில்லை. ஒவ்வொருவரும் வித்தியாசமான ஆலோசனைகளைக் கொடுத்ததால் நான் குழம்பி விட்டேன். ஒவ்வொருவரின் மனநிலையும் வித்தியாச மானது. பிறர் என்ன நினைக்கிறார்கள் என்பது முக்கியமல்ல, எனக்கு எது விருப்பமோ அதில் திருப்தியாக இருப்பது நல்லது. பிறர் மதிப்பீட்டை நீங்கள் நாட வேண்டாம்.

## உன் தீர்மானத்தை நீயே எடு

அப்படியிருந்தும், நான் என் தாயின் வயிற்றிலிருந்ததுமுதல், என்னைப் பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன்,

தம்முடைய குமாரனை நான் புறஜாதி களிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக் கும்பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தபோது, உடனே நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனைபண்ணாமலும்,

**கலாத்தியர் 1:15,16**

பவுலை கலாத்தியா நாட்டிற்கு ஊழியத் திற்காக தேவன் அனுப்பும் போது அவன் யாரிடமும் யோசனை கேட்கவில்லை. சத்தியத்தைக் கூறும் பரிசுத்த ஆவியானவர் நம் உள்ளத்தில் இருக்கும்போது நாம் யாரிடமும் சென்று ஆலோசிக்க தேவையில்லை.

ஆம், இதற்கு மற்றுமொறு பக்கமும் உண்டு. அறிவுரை கூறுவோர் பலர் இருப்பின், அதற்கு பாதுகாப்பு உண்டு (நீதி மொழிகள் 11:14) என்று நீதி மொழிகளின் ஆக்கியோன் கூறுகிறார். இதன் கருத்து என்னவென்றால் பிறர் அறிவுரைகள் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துத லுக்கு ஏற்றதாக இருந்தால் அந்த அறிவுரைகளை நாம் ஏற்றுக் கொள்ளலாம்.

## யாருக்கும் அடிமைப்படாதே

ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்.

கலாத்தியர் 5:1

உன்னிடம் ஏதோ குறையிருக்கிறது என்ற உணர்வு இல்லாமல் குறை கூறுதலை சமாளிக்கக் கற்றுக்கொள். மற்றவர்களின் கருத்துக்கு ஏற்றார்போல மாற்ற வேண்டுமென்ற சிந்தனைக்கு அடிமையாகாதீர்கள்.

கிறிஸ்துவுக்குள் நீ யார் என்று உனக்குத் தெரியும். ஆதலால் பிறர் கூறும் மதிப்பீட்டுகளினால் உன்னில் ஏதோ குறை இருக்கிறதோ என்ற உன்னைக் குறித்து சந்தேகம் கொள்ளாதே. அவர்கள் கூறும் ஆலோசனை உன்னால் அங்கீகரிக்க விருப்பமில்லை என்றால் அதைக் குறித்து கவலைப்படாதே. குறை கூறுதலை சமாளிக்கக் கற்றுக்கொள்.

# 8

# உன்னுடைய தகுதியை நீயே நிதானி

பிறர் உன்னை நிதானிக்க வேண்டும் என்று விரும்பாதே.

## உறுதிப்படுத்துதலின் அவசியம்

அன்றியும்,நீர் என்னுடைய நேச குமாரன்,உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று,வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று.

மாற்கு 1:11

ஒரு குழந்தைக்கு தான் தனது பெற்றோரால் அவர்களிடம் உள்ள குற்றம் குறைகள் மத்தியில் நேசிக்கபடுகிறோம், பாதுகாக்கப்படுகிறோம் என்ற உறுதி இருக்க வேண்டும். அந்த நம்பிக்கை அவர்களிடம் இருந்தால் அவர்கள் எவ்வித அச்சமுமின்றி பாதுகாப்பாக இருப்பதை உணர்வார்கள். பெற்றோர், தங்கள் பிள்ளைகளிடம், நாங்கள் அங்கீகரித்துக்

கொள்கிறோம் என்பதை அடிக்கடி வெளிப் படுத்த வேண்டும். "ஆம் அப்படித்தான், இன்னும் நன்றாக முயற்சி செய். மிகவும் அருமையாக இருக்கிறது" என்ற அவர்களின் செயல்களைப் பாராட்டி ஊக்குவிக்க வேண்டும். அநேக சமயங்களில் பெற்றோருக்கே அங்கிகரிக்கத் தெரிவதில்லை. ஏனெனில் அவர்கள் தங்கள் பெற்றோரிடமிருந்து அதைப் பெற்றுக் கொள்ளாததினாலே.

அநேக சமயங்களில் யாராவது நம்மிடம், "நான் உன்னைக் குறித்து பெருமை படுகிறேன்" என்று சொல்லவேண்டுமென்று விரும்புகிறோம். ஆனால் சில சமயங்களில் நாம் அதை சிலரிடமிருந்து எப்போதுமே பெற்றுக்கொள்ளமாட்டோமென்று அறிந்துக் கொள்ளவேண்டும்.

## ஏற்றுக்கொள்ளப்படுதல்

பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின
தம்முடைய கிருபையின் மகிமைக்கு புகழ்ச்சியாக,
தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை
இயேசுகிறிஸ்துமூலமாய்த் தமக்குச்
சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித் திருக்கிறார்
எபேசியர் 1:5,6

நம்முடைய போராட்டங்களில் ஒரு பகுதி எப்போதுமே பிறர் நம்மை அங்கிகரிக்க வேண்டுமென்பதிலேயே இருக்கிறது. அவர்கள் அங்கிகரிக்கப் போவதில்லை. ஏனென்றால் அவர்களுக்குத் தெரியாது வேதாகமம் நமக்கு கிறிஸ்துவில் நாம் யாவரும் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படுகிறோம். தேவன் நம்மை இயேசு கிறிஸ்துவின் மூலம் தமக்குச் சொந்தமான பிள்ளைகளாக்கிக்

கொள்கிறார் (எபேசியர் 1:6, யோவான் 6:37) நமது உறவினர் ஒருவேளை நாம் எதிர்பார்ப்பதை கொடுக்காவிட்டாலும் தேவன் அது நமக்குத் தேவையானால் அதை அருளிச் செய்கிறார். அவரே நமக்கு கணவராக, மனைவியாக, தாயாக, தகப்பனாக இருந்து, நம் தேவையை சந்திப்பார். மற்றவர்களால் நமக்குக் கொடுக்க இயலாதக் காரியங்களை தேவன் நமக்குக் கொடுப்பார்.

## உன் செயலுக்கு நீயே பொறுப்பு

> ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான
>
> ரோமர் 14:12

எங்களுடைய திருமணத்தின் ஆரம்ப நாட்களில், என்னுடைய ஆளியலில் அநேக பிரச்சனைகளிருந்தது. பல வருடங்களுக்கு பின்னர் ஒரு நாள் டேவ் என்னிடம், "நீ என்னை எப்படி நடத்துகின்றாயென்பன் பேரில் என் மதிப்பை நான் வைத்திருப்பேனென்றால், நான் என்னைக் குறித்து ஒரு நல்ல மதிப்பைக் கொண்டிருக்கவே மாட்டேன்" என்றார். உன் வாழ்விலும் சரியாக நடத்தாத எவராவது இருக்கின்றனரா? உன்னுடைய வாழ்வில் நீ பிறரை குற்றப்படுத்துகிறாயா? உன்னுடைய தவறால் பிறரை நீ நிர்பந்தமாக்கிக் கொள்கிறாயா? ஆனால் என் கணவருக்கு ஒரு உறுதியான ஆவிக்குரிய அஸ்திபாரமிருந்ததனால் நான் அவர் சந்தோஷத்தை எடுத்துவிடாதபடி தன்னை பார்த்துக்கொண்டார்.

உன் தவறுக்கு நீ தான் காரணம். அநேகர் தங்கள் தவறுக்கு வேறு யாரையாவது காரணமாகக் கூறுவார்கள். அது தவறு.

## நம் தகுதி இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கிடைக்கிறது

மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரி லிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய்ரூபிக்கப்பட்ட தேவகு மாரனுமாயிருக்கிறார்.

ரோமர் 1:5

நாம் கிறிஸ்துவுக்குள் யாராக இருக்கிறோம் என்பதில் பாதுகாப்பாக இருக்கவேண்டும். நாம் எப்படியிருக்கின்றோமோ, எதை செய்கின்றோமோ, பிறர் நம்மை எப்படி நடத்துகின்றனரோ அதை பொறுத்து நம் தகுதியிருப்பதில்லை. இயேசு தம்முடைய இரத்தத்தை உனக்காக சிந்தியதால் நீ விசேஷித்தவன்.

இயேசு கிறிஸ்து சிலுவையில் தம் இரத்தத்தை சிந்தியதால் நாம் நம் தகுதியை பெற்றுக் கொள்கிறோம். நம்மிடத்தில் குறைகள் காணப்படலாம். நம்மில் மாற்றம் செய்யப்பட வேண்டிய காரியங்கள் இருக்கலாம். அதற்காக தேவன் நம்மில் செய்படுகிறார்.

## நம்முடைய தகுதி கிறிஸ்துவில் இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்

கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப் பட்டேன். ஆயினும் நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து

எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.

**கலாத்தியர் 2:20**

**நம் குறைகளையே நாம் சிந்திக்காமல் கிறிஸ்துவில் நாம் பெற்ற சிலாக்கியங்களை சிந்திக்க வேண்டும். பிறர் நம்மை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்பினால், கிறிஸ்துவில் தேவன் நம்மை ஏற்றுக் கொள்கிறார் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டம்.**

# 9

# உன்னைக் குறித்து தாழ்வு மனப்பான்மை கொள்ளாதே

**உன் பாதுகாப்பற்ற நிலைமையிலிருந்து விடுபட உன்னைக் குறித்த தாழ்வு மனப் பான்மையிலிருந்து வெளியேற வேண்டும்.**

## குறைவைப் பாராதே

> ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தி
> யமானவைகள், காணப் படாதவைகளோ
> நித்தியமானவைகள்.
>
> 2 கொரிந்தியர் 4:18

**எனது காரியதரிசி ராக்சேன் மிகவும் அழகுள்ளவள். அவள் உருவம், நிறம், முடி எல்லாமே மிக அழகாக இருக்கும். ஆனால் அவளுக்கு தன் உடம்பில் ஒரு குறையிருப் பதாகவே நினைத்துக் கொள்வாள். அவள் கால்கள் சற்று பருமனாய் இருப்பதாக அவள் எண்ணம். அவள் எடையே 93 பவுண்டுகள்**

தான். அப்படியானால் அவள் உடம்பில் எந்தப் பாகமுமே போதிய அளவுக்கு மேல் பருமனாய் இருக்க முடியாது. நாம் எவ்வளவு நன்றாக இருந்தாலும் சாத்தான் நம்மில் ஒரு குறையை நமக்கு காண்பித்துக் கொண்டே இருப்பான். அந்தக் குறையை வேறு யாரும் காணமுடியாவிட்டாலும், அதை நமக்கு சாத்தான் காட்டிக் கொண்டே இருப்பான்.

நாம் குறைவாகக் கருதும் காரியம் பிறருக்கு அழகாகவும் இருக்கலாம். ஆதலால் நம் பாதுகாப்பற்ற நிலையிலிருந்து வெளி வரவேண்டுமானால் நம்மில் உள்ள குறையைக் குறித்து கவலை கொள்ளக் கூடாது. நாம் நம்முடைய நெருங்கிய நண்பர்களிடம் நாம் நம்மில் குறைகளாக கருதுபவற்றைப் பற்றி சொல்வோமானால் அவர்கள் நம்மைப் பார்த்து சிரிப்பார்கள். நாம் நம்மிடம் பெரிய குறைகளாகக் கருதுபவற்றை அவர்கள் நம்முடைய சிறந்த குணங்களாகக் கருதுவார்கள்.

## உன் தோற்றம் உனக்கு திருப்தியை தரட்டும்

> அப்படியானால், மனுஷனே, தேவனோடு எதிர்த்துத் தர்க்கிக்கிற நீ யார்? உருவாக்கப்பட்ட வஸ்து உருவாக்கின வனை நோக்கி: நீ என்னை ஏன் இப்படி உண்டாக்கினாயென்று சொல்லலாமா?
>
> ரோமர் 9:20

யாராவது ஒரு வடிவம் அமைத்து இதே போல இல்லை என்றால் நீங்கள் குறைவுள்ள வர்கள் என்று சொன்னது உண்டா? “நாம் தேவனின் கை வேலைப்பாடு” (எபேசியர் 2:10). நாம் தேவனால் உருவாக்கப்பட் டிருக்க யார் நம்மில் கறை காண முடியும்? நாம் எவ்விதமாக காட்சி அளித்தாலும் நாம்

**இறைவனால் ஒரு உயரிய நோக்கத்தோடு உருவாக்கப்பட்டவர்கள். நாம் அவர் உருவாக்கியதை குறை கூறக் கூடாது. அவர் தந்திருக்கிற நிலையை மாற்றுவதற்கு நாம் வீணாக முயற்சி செய்யக் கூடாது.**

பாதுகாப்பின்மையை உங்கள் வாழ்வில் மேற்கொள்ள விருப்பமா? உங்கள் குறைகளை சரியாக நோக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

# 10

# நம்பிக்கைக்கு உண்மையான ஊற்றை கண்டறி

நம்மைக் குறித்து பாதுகாப்பாக உணருவதற்கு மிக முக்கியமான காரியம், நம்மேல் நம்பிக்கை ஏற்பட உண்மையான வழி எது என்று கண்டு பிடிக்க வேண்டும்.

## மாம்சத்தில் நம்பிக்கை வைக்காதே

> ஏனெனில், மாம்சத்தின்மேல் நம்பிக்கை யாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மைபாராட்டுகிற நாமே விருத்த சேதனமுள்ளவர்கள்.
>
> பிலிப்பியர் 3:3

உன் நம்பிக்கை எதில் இருக்க வேண்டும் என்று பார்ப்பதற்கு முன், உன் நம்பிக்கையை எதிலிருந்தெல்லாம் நீக்க வேண்டும் என்று பார்ப்போம்.

உன் நம்பிக்கையை மாம்சத்தில், கல்வியில், உன் அழகில் செல்வாக்கில் வைக்காதே. வெளிப்புற தோற்றங்களில் உன் நம்பிக்கையை வைக்காதே. என் மகள் மிகவும் பிரயாசப்பட்டு அதிக நேரம் செலவழித்து முடியை அலங்கரித்து வருவாள். ஆனால் சில நேரங்களில் அவள் முடியை அலங்கரித்த பின் உள்ள நிலையை விட அலங்கரிக்கும் முன் இருந்த நிலைதான் அழகாக இருக்கும். ஆகவே நம் நம்பிக்கையை தோற்றத்தில் வைப்பது வீண். இது தவறாக வைக்கப்பட்ட நம்பிக்கைக்கு ஒரு உதாரணம்.

## நம்பிக்கையை தவறான இடத்தில் வைத்தல்

கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து, உன் கால் சிக்கிக்கொள்ளாதபடி காப்பார்.

நீதிமொழிகள் 3:26

பொதுவாக பெற்றோர் தங்கள் பிள்ளை களின் கல்வியில் தங்கள் நம்பிக்கையை வைப்பார்கள். ஒரு தகப்பன் தன் மகள் வைத்தியராக வேண்டும் என்று அதிகமாக பிரயாசப்பட்டார். அவருக்கு அவளைக் குறித்த தேவனின் திட்டம் தெரியவில்லை. அவளோ எனது காரியதரிசியாக வேண்டும் என்று தேவன் திட்டம் வைத்திருந்தார். உங்கள் நம்பிக்கை எங்கே இருக்கிறது? உங்கள் பட்டங்கள் மீதா? உங்கள் துணைவர் மீதா? உங்கள் தொழிலிலா? வேதம் தெளிவாக போதிக்கிறது, நீங்கள் உங்கள் கவலைகளையெல்லாம் என் மேல் போட்டு விடுங்கள் (1 கொரிந்தியர் 5:7). தேவனை நம்பி கீழ்ப்படி. அவரே காரியத்தை வாய்க்கச் செய்வார். கிறிஸ்தவர்களாக நாம் நமது நம்பிக்கையை நம் கல்வியிலோ, தோற்றத்திலோ, ஸ்தானத்திலோ,

சொத்திலோ, நம் வரங்களிலோ, திறமைகளிலோ, தாலங்களின் மேலோ, நம் சாதனைகளின் மேலோ, அல்லது மற்ற மக்களின் கருத்துக்களின் மீதோ வைக்கக் கூடாது. நம் பரலோகப்பிதா நம்மிடம் போதும், மாம்சத்தின்மேல் நம்பிக்கை வைத்ததுபோது என்னை, என் மேல் மட்டுமே உன் நம்பிக்கையை வை என்று கூறுகிறார்.

## தேவன் விரும்பியபடி நீ இருக்கிறாயா?

கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்: நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலுருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னை பரிசுத்தம் பண்ணி, உன்னை ஜாதிகளுக்கு தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார்.

அப்போது நான்: ஆ கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, நான் பேச அறியேன்; சிறுபிள்ளையாயிருக்கிறேன் என்றான். ஆனாலும் கர்த்தர்: நான் சிறுபிள்ளையென்று நீ சொல்லாதே, நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ பேற், நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளையெல்லாம் நீ பேசுவாயாக.

நீ அவர்களுக்கு பயப்படவேண்டாம்; உன்னைக் காக்கும் படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லி...

எரேமியா 1:4-8

எரேமியாவை தேவன் அழைத்து, “நீ மக்களுக்கு நான் கொடுக்கும் செய்தியை அறிவி” என்றார். ஆனால் அவன், “நான் பேசமாட்டேன், சிறியவனாயிருக்கிறேன்” என்றாள். தேவன்

நம்மை ஒரு காரியத்திற்காக அழைத்தால், நம்மால் அக்காரியத்தைச் செய்ய முடியும், நாம் அதற்கு தகுதி உடையவர்கள்.

நாம் வேத வசனங்களை போதிக்கும்படி அழைக்கப் பட்டேன். அநேகர் என்னை குறை கூறினாலும் நான் எதற்காக அழைக்கப்பட்டேனோ அதை முடிவுவரை நிறைவேற்றுவேன், பின் வாங்க மாட்டேன். நான் என்னை அழைத்த தேவனில் நம்பிக்கையை வைத்திருக்கிறேன்.

## மதம் தேவனின் திட்டத்தில் குறுக்கிடலாம்

மாம்சத்தின்மேல் நம்பிக்கை வைக்க வேண்டுமானால் நானும் வைக்கலாம். வேறொருவன் மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிருக்க நினைத்தால் நான் அதிகமாய் அப்படிச் செய்யலாம்.

நான் எட்டாம் நாளிலே விருத்தசேதன மடைந்தவன், இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்திரத்தான், எபிரெயரில் பிறந்த எபிரெயன், நியாயப்பிரமாணத் தின்படி பரிசேயன்.

பக்திவைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன், நியாயப்பிரமாணத் திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப ்படாதவன்.

பிலப்பியர் 3:4-6

பவுல் யூத மதத்தின் பிரகாரம் குற்ற மற்றவன். எல்லா ஒழுங்குகளையும் கடைப் பிடித்தவன். ஆனால் எனக்கு ஆதாயமான இவை அனைத்தும் கிறிஸ்துவின் பொருட்டு இழப்பு

**என கருதுகிறேன். கிறிஸ்துவைப் பற்றும் அறிவுக்காக மற்ற எல்லாவற்றையும் இழப்பாக கருதுகிறேன்.**

## கிறிஸ்துவை ஆதாயமாகக் கொள்

ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைக ளெவைகளோ அவைகளைக் கிறிஸ்து வுக்காக நஷ்டமென்று எண்ணினேன்.

அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொள்ளுகிறேன்.

பிலிப்பியர் 3:7,8

**தேவனிடத்தில் உன் தகுதியை ஏற்படுத்த நீ செய்கிற ஒழுங்கு நெறிகள் எவை? ஒருவேளை நீ தினமும் குறிப்பிட்ட நேரங்களில் ஜெபிக்கலாம் அல்லது வேதத்தில் இரண்டு மூன்று அதிகாரங்கள் வாசிக்கலாம். மதம் நமக்கு இதைச் செய், அதைச் செய்யாதே என்று விதிமுறைகளை கொடுக்கிறது. (கொலோசெயர் 2:20-21) பவுல் செய்தது போல் மதச் சடங்காச் சாரங்களை விட்டு கிறிஸ்துவை ஆதாயப் படுத்திக் கொள். அவரை அறிகிற அறிவில் வளர வேண்டும். இப்படி செய்வதே தேவனின் விருப்பமாகும்.**

## கிறிஸ்துவோடு இணைந்திரு

நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத் தினால் வருகிற சுயநீதியை உடையவனா யிராமல்,

கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத் தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்து வுக்குள் இருக்கிறவனென்று காணப்படும் படிக்கும்.

பிலிப்பியர் 3:9

பவுல் தன் வாழ்க்கையில் ஒரு காரியத் திற்கு முக்கியத்துவம் கொடுத்தார். அதாவது அவர் கிறிஸ்துவுக்குள் இருக்கிறவரென்று காணப்படவும், அறியப்படவும் வேண்டும். அதுதான் அவரது ஒரே விருப்பம். இதுதான் நமது விருப்பமாகவும் இருக்க வேண்டும். நாம் எப்பொழுதுமே ஒரு பரிபூரணமான நடத்தையை காண்பிக்க இயலாது. ஆனால் தேவனுடைய உதவியுடன் நாம் எப்போதுமே ஒரு பரிபூரணமான இரட்சகரை பிரதிபலிக்கலாமே. நாம் ஏன் இன்னும் பூரணராக்கப் படவில்லை? அப்படி பூரணராகி விட்டால் நாம் கிறிஸ்துவின் அன்பையும், கிருபை யையும் தேடாமல், நம் திறமையையும், தகுதியையுமே சார்ந்து விடுவோம். நீங்களும் நானும் ஒரு குறைவுமில்லாமல் பூரணமாகிவிட்டால், தேவன் நமக்கு நன்மை செய்ய கடமைப்பட்டவர்கள் என்றும் நாம் அவருக்கு கீழ்ப்படிந்து அவர் நீதிநெறி களுக்கு உட்பட்டு நடப்பதால் அவர் நம் ஜெபங்களுக்கு உத்தரவு கொடுக்க கடமைப்பட்டவர் என்றும் கருதி விடுவோம்.

அவர் நமக்கு குறை வைத்திருப்பதின் நோக்கம் என்னவென்றால், ஒரு குறை அல்லது தேவை இருந்தால் தான் நாம் அவரை நாடிச் செல்வோம். அவர் உதவியைக் கேட்போம். அவர் கிருபையைச் சார்ந்து வாழ்வோம்.

நம் கிரியைகள் நமக்கு சமாதானத்தையும், நிறைவையும் கொடுக்கும்படி தேவன் நம்மை நடத்தமாட்டார், நம் கிரியைகள்

நமக்கு ஏமாற்றத்தை கொடுக்கும்படிக்கே அவர் அனுமதிப்பார், ஏன்? ஏனென்றால் மாம்சக் கிரியை விரக்தியையும், வேதனையையும் தவிர வேறெதையும் உண்டாக்காது (ரோமர் 3:20).

அப்படியென்றால் நாம் செய்ய வேண்டுவதென்ன. வாழ்க்கையை அனுபவியுங்கள். தேவனை இன்னும் அதிகமாக நாம் அனுபக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அது நமக்கு மட்டும் உதவியாக இருக்காது, நம்மைச் சுற்றியுள்ள மக்களின் மேல் நமக்கிருக்கும் அழுத்தத்தையும் எடுத்துப் போட்டுவிடும். எல்லோருமே பரிபூரணராக இருக்க வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கக்கூடாது, அவர்களை அவர்களாக நான் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நாம் தினமும் தேவன் முன்னிலையில் "ஆண்டவா! நான் குறைவுள்ளவன், என்னில் எந்த ஒரு நற்கிரியையும் இல்லை, நான், கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறேன்" என்று அறிக்கை செய்ய வேண்டும். நாம் தேவனைச் சார்ந்து வாழ வேண்டும் என்று அறிந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு நாளும் நாம் இவ்வாறாக வாழக் கற்றுக்கெள்ள வேண்டும், இல்லையெனில் நாம் சமாதானத்தையும், திருப்தியையும் அனுபவிக்கவே மாட்டோம். நம் நற்கிரியைகளையே நாம் சார்ந்திருப்போமென்றால் நம் வாழ்க்கையை அனுபவிக்கவே முடியாது. தேவனை நாம் சார்ந்திருக்கின்றோமென்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும்.

## தேவனைச் சார்ந்து வாழ மூன்று படிகள்

கர்த்தரை நம்பி நன்மைசெய், தேசத்தில்
குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள்

**சங்கீதம் 37:3**

முதலாவதுபடி நீ உன்னுடைய நற்கிரியைகளினால் உன் வாழ்வில் வெற்றி அடைய முடியாது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து, அவரையே சார்ந்து வாழ்க்கை நடத்து, அப்பொழுது அவரே உன் சார்பில் செயலாற்றுவார். (சங்கீதம் 37:5)

இரண்டாவது படி, தேவன் யார் என்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும்: உன் தேவனாகிய கர்த்தர் ஒருவரே, தேவன் அவரைத் தவிர வேறே தேவன் இல்லை என்பதை நீ அறிந்து உன் வாழ்வில் உணர்ந்து கொள்ள வேண்டும். (உபாகமம் 4:35)

மூன்றாவது படி, தேவன் இருப்பது போல் நாமும் இவ்வுலகில் இருக்கிறோம் என்ற உண்மையை நாம் அறிந்து கொள்ள வேண் டும். இது நம் வாழ்வில் ஒரு புது நம்பிக் கையைக் கொடுக்கும் (1 யோவான் 4:17).

## அப்பத்தினால் மாத்திரமல்ல

என் கற்பனைகளை நீ கைக்கொள்வாயோ
கைக்கொள்ளமாட்டாயோ என்று அவர் உன்னைச்
சோதித்து, உன் இருதயத்தி லுள்ளதை நீ
அறியும்படிக்கும், உன்னை இந்த நாற்பது வருஷமளவும்
வனாந்தரத் திலே நடத்தி வந்த எல்லா வழியையும்
நினைப்பாயாக.

அவர் உன்னைச் சிறுமைப்படுத்தி, உன்னைப்
பசியினால் வருத்தி, மனுஷன் அப்பத்தினால் மாத்திரம்
அல்ல, கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற
ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்பதை
உனக்கு உணர்த்தும்படிக்கு, நீயும் உன் பிதாக்களும்

அறியாதிருந்த மன்னாவினால் உன்னைப் போஷித்தார்.
உபாகமம் 8:2,3

என்னுடைய ஊழியப்பாதையில் நான் அநேக காரியங்களை கற்றுக் கொள்ள வேண்டியதிருந்தது. சில நாள் தபாலில் கடிதங்களும், போதிய பணமும் இருக்கும். மற்ற நாளில் பணம் இருக்காது. சிலநாள் பொதுக் கூட்டங்களில் நல்ல கூட்டம் இருக்கும். சிலநாள் கூட்டமே இருக்காது. உடனே சாத்தான், "உன் போதனை மக்களுக்குப் பிடிக்கவில்லை, ஆகவே அநேகர் வரவில்லை" என்பான். சூழ்நிலைகள் நன்றாக இருந்தபோது என் உணர்ச்சிகள் மேலோங்கியிருந்தது, சூழ்நிலைகள் பாதகமாக இருந்தபோது என் உணர்ச்சிகள் சோர்ந்துவிட்டது, இதை நான் "யோ-யோ என்ற விளையாட்டு பொருளைப் போலிருக்கிற யோ-யோ" கிறிஸ்தவம் என்று கூறுகிறேன். இதன் மூலம் தேவன் எனக்கு ஒரு பாடம் கற்றுக் கொடுத்தார். நீ பணத்தையும், கூட்டத்தை யும் சார்ந்து இருக்கிறாய். ஆனால் மனிதன் அப்பத்தினால் மாத்திரம் வாழ்கிறதில்லை. தேவனுடைய வாயினின்று புறப்படுகின்ற ஒவ்வொரு வார்த்தையின் மூலமும் வாழ்கிறான் என்பதை கற்றுக் கொண்டேன். மனிதன் பணம், செல்வாக்கு, கல்வி ஆகியவற்றால் சிறப்பாக வாழ முடியாது. அவன் ஒவ்வொரு நாளும் தன் பலத்திற்காக தேவனையே சார்ந்து இருக்க வேண்டும். இந்தப் பாடத்தைக் கற்றுக் கொடுக்கத்தான் தேவன், இஸ்ரவேல் ஜனங்களை 11 நாட்கள் பயண தூரத்தை 40 வருடங்களில் கடக்கச் செய்தார்.

## தேவன் தான் நம்மை ஆதரிப்பார்

அப்பொழுது, அவர்களை வெள்ளியோடும் பொன்னோடும் புறப்படப்பண்ணினார், அவர் கள்

கோத்திரங்களில் பலவீனப்பட்டவன் ஒருவனும் இருந்ததில்லை.

**சங்கீதம் 105:37**

இஸ்ரவேல் மக்கள் எகிப்தை விட்டு வெளியே வரும்பொழுது அவர்களுக்குப் போதிய செல்வங்கள் இருந்தன, நல்ல சரீர பலம் இருந்தது.

ஆகவே, ஒருவேளை தங்கள் சுயபெலத் தால் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று விட்டோம் என்று அவர்கள் நினைக்காதபடி அவர்களை தேவன்தான் வழிநடத்தினார் என்று அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு அநேக சோதனைகள் நேரிடச் செய்தார். அவர்கள் துன்பங்களிலிருந்து விடுபட வேண்டுமானால் தங்கைள வழிநடத்தி வந்த தேவனையே சார்ந்து இருக்க வேண்டும் என்ற பாடத்தை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க விரும்பினார்.

நான் ஆரம்பத்தில் மிகுதியாக மக்கள் கூட்டத்தைப் பார்த்ததும் ஜாய்ஸ் மேயரின் சிறந்த செய்தியினால் தான் அநேகர் வருவதாக எண்ணினேன். மக்கள் கூட்டம் கூட்டமாக வரவேண்டுமானால், ஜாய்ஸ் மேயர் அல்ல, தேவனே கிரியை செய்ய வேண்டும் என்று கற்றுக் கொள்ள எனக்கும் 40 வருடங்கள் ஆயின.

## தேவனிடத்தில் சந்தோஷமும், சமாதான மும் பெற்றுக் கொள்ளும் வழி

என் சாமார்த்திமும் என் கைப்பெலனும் இந்த ஐசுவரித்தை எனக்குச் சம்பாதித்தது என்று நீ உன்

**இருதயத்தில் சொல்லிக் கொள்ளாமலும் இருக்க எச்சரிக்கை யாயிருந்து...**

உபாகமம் 8:17

என் மகிழ்ச்சிக்குக் காரணம் என் ஊழியம் அல்ல, கர்த்தரே என்றும், என் சமாதானத்திற்குக் காரணம் என் கிரியைகள் அல்ல, கிறிஸ்துவே என்றும் இப்பொழுது அறிந்து கொண்டேன்.

எல்லாமே தேவனிடத்திலிருந்து நமக்கு வருவது அல்ல, ஆனால் நமக்கு நேரிடுகிற நன்மையான அல்லது தீமையான காரியங்களிலில் எல்லாம் நாம் தேவனைச் சார்ந்தே வாழ வேண்டும் என்னும் பாடம் தேவன் மூலமாக கற்றுக் கொள்கிறோம்.

ஆகவே இப்பொழுது நான் கூட்டங்களை நடத்தி முடித்ததும், “ஆண்டவரே, அடுத்தக் கூட்டத்தை நடத்தும் பொறுப்பை உம் கையில் விட்டு விடுகிறேன். இன்று நீர் மக்களை அழைத்து வந்தீர், அவர்கள் நாளையும் வருவது உம் சித்தமானால் நாளையும் அழைத்து வாரும். நான் எவ்வளவு சிறப்பாய் பேச முடியுமோ அவ்வளவு சிறப்பாய் பேச உம் அருள் தாரும்” என்று ஜெபிப்பேன்.

உன்னால் இயன்ற அளவு சிறப்பாக காரியங்களை நடத்து, மீதியை ஆவியானவர் கையில் விட்டு விடு. இதுதான் நீ சமாதானமாகவும், பாதுகாப்பாகவும் வாழ்வதற்கு வழி.

உன் நம்பிக்கையையும், மதிப்பையும், பாதுகாப்பையும், நல்வாழ்வையும் எந்தக் காரியத்திலிருந்து பெற்றுக் கொள்ள நீ முயன்றுக் கொண்டிருக்கிறாயோ அதிலிருந்தெல்லாம் தேவன் உன்னை விடுவிக்கும் படி கேள். அவரிடம் அதை கொடுத்துவிடு. ஏனென்றால் அவர் தமது வழியை உன்னில் நிறைவேற்றும் மட்டும் ஓயமாட்டார். அவர் வழியே சிறந்தது.

# முடிவுரை

கிறிஸ்துவினால் நமக்குக் கிடைக்கும் பாக்கியங்களை நினைவு கூர்ந்தவர்களாய் நமது தனித்தன்மையையும், தனிச் சிறப்பையும், பாதுகாவலையும் உணர்ந்து கொள்வோம். தேவன் நம்மீது எவ்வளவு அன்பு கூருகிறார் என்பதை உணரும்போது நம் மீது நமக்கு நம்பிக்கை பிறக்கும். தேவனுடைய அன்பில் நாம் நிலைநிற்கும் போது நம் உள்ளத்தின் தெய்வீக சமாதானம் நிலவும்.

## நம்பிக்கைக்கான 10 படிகள்

இதை நீங்கள் எப்பொழுதும் பார்க்கும்படி ஒரு அட்டையில் பெரியதாக எழுதி தொங்க விடுங்கள்.

1. உன்னைக் குறித்து குறைவாக ஒருபொழுதும் பேசாதே.
2. உள்ளதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்.
3. பிறரோடு ஒப்பிட்டுப் பாராதே.

4. குறைவுகளை அல்ல, நிறைவுகளை நினை.
5. தாலந்துகளை உபயோகி
6. உன்னில் தனிச்சிறப்பு காணப்படட்டும்
7. பிறர் கூறும் குறைகளை சமாளி
8. உனது தகுதியை நீயே நிதானி
9. உன்னைக் குறித்து தாழ்வு மனப்பான்மை கொள்ளாதே
10. நம்பிக்கைக்கு உண்மையான ஊற்றைக் கண்டறி

# *பகுதி 2*

# வேதவசனங்கள்

# மனதைரியத்தைப் பற்றிய வேத வசனங்கள்

அன்பிலே பயமில்லை. பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும். பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல.

1 யோவான் 4:18

பலவிதங்களில் மக்களைத் துன்புறுத்துவதில் சாத்தான் சந்தோஷம் அடைகிறான். பாதுகாப்பின்மை, சுய புறக்கணிப்பு, சய தண்டனை, தாழ்ந்த சுய அபிப்பிராயம் போன்றவை அவனுடைய வழிகள். பய ஆவியின் மற்றொரு புறமே பாதுகாப்பின்மையாகும்.

இந்த வேதவாக்கியங்களெல்லாம் தேவனுடைய அன்பை உங்களுக்கு அறிவிக்கட்டும், உங்கள் பாதுகாப்பின்மை உங்களை விட்டகலட்டும்.

நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும், உன்

**தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்துக் கொண்டார்.**

**சகல ஜனங்களிலும் நீங்கள் திரட்சியான ஜனமென்று கர்த்தர் உங்கள் பேரில் அன்புவைத்து உங்களைத் தெரிந்து கொள்ளவில்லை; நீங்கள் சகல ஜனங்களிலும் கொஞ்சமாயிருந்தீர்கள்.**

உபாகமம் 7:6,7

நம்பிக்கை உண்டாயிருக்கிறதினால் திடனாயிருப்பீர்; தோண்டி ஆராய்ந்து சுகமாய்ப் படுத்துக்கொள்வீர்.

பயப்படுத்துவாரில்லாமல் நித்திரை செய்வீர்; அநேகர் உமது முகத்தை நோக்கி விண்ணப்பம் பண்ணுவார்கள்.

யோபு 11:18,19

என் அலைச்சல்களைத் தேவரீர் எண்ணியிருக்கிறீர், என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும், அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது?

சங்கீதம் 56:8

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.

யோவான் 3:16

விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி,

சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து,

அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண் டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

எபேசியர் 3:17-19

தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக ்கிறார்.

2 தீமோ. 1:7

நான் அவரிடத்தில் நம்பிக்கையாயிருப்பேன் என்றும். இதோ, நானும், தேவன் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் என்று சொல்லியிருக்கிறார்.

எபிரேயர் 2:13

தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில்

நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்.

1 யோவான் 4:16

அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்.

1 யோவான் 4:19

# மனதைரியத்திற்கான ஜெபம்

மகிமையுள்ள பிதாவே,

நான் உம்முடைய சாயலில் உருவாக்கப்பட்டிருக்கிறேன். எனவே நான் பாதுகாப்பற்றிருக்கவில்லை. என் பாதுகாப்பு உம்மில்தான் இருக்கிறது. நீரே என்னுடைய நீதியாகவும், சமாதானமாகவும் இருக்கிறீர். நான் மனுஷர் பயத்தினின்றும், குறைவுள்ளவன் என்ற உணர்வினின்றும் என்னை மாற்றிக்கொள்கின்றேன். மற்றவருடன் என்னை ஒப்பிட்டுக்கொள்வதை நிறுத்த எனக்குதவும். நீர் என்னை முழுமையாக, பாதுகாப்பாக, குறையற்றவளாக காண்பதை போன்று நான் என்னை பார்க்க எனக்குதவும். இயேசு கிறிஸ்துவின் மூலமாக நான் என்னுடைய எல்லா பாதுகாப்பின்மையையும் மேற்கொண்டு என் வாழ் நாள் முழுவதும் தைரியமாக நடக்க என்னால் இயலும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள எனக்கு உதவியருளும்.

இயேசுவின் நாமத்திலே ஆமென்!

# தேவனோடு தனிப்பட்ட உறவை வைத்துக்கொள்வதற்கான ஜெபம்

மற்ற எல்லாவற்றையும்விட இயேசு உங்களை இரட்சிக்கவும், பரிசுத்த ஆவியினால் நிரப்பவும் விரும்புகிறார். நீங்கள் சமாதானபிரபுவாகிய இயேசுவை உங்கள் ஆண்டவராகவும், மீட்பராகவும் இதுவரை ஒருபோதும் அழைத்திராவிட்டால், நீங்கள் அவ்வாறு செய்யும்படி இப்பொழுது நான் உங்களை அழைக்கிறேன். கீழ்க்கண்ட ஜெபத்தை ஏறெடுங்கள். நீங்கள் இதை முழுமனதோடு உண்மையாகவே செய்தால், கிறிஸ்துவுக்குள்ளாக ஒரு புதுவாழ்க்கையை உணருவீர்கள்.

*பிதாவே,*

*நீர் உலகத்தை இவ்வளவாக நேசித்தீர், உம்முடைய ஒரே குமாரனை எங்களுடைய பாவங்களுக்காக மரிக்கக் கொடுத்தீர், அதனால் அவருக்குள் விசுவாசிக்கிறவன் எவனும் அழிந்துபோகாமல், நித்தியவாழ்வைப் பெறுகிறான்.*

*உம்மிடத்திலிருந்துப் பெற்ற வெகுமதியான, விசுவாசத்தின் மூலமாய் கிருபையாக இரட்சிக்கப்பட்டோம் என்று*

*உம்முடைய வசனம் சொல்கிறது. நாங்கள் இரட்சிப்படைய எங்களால் எதுவும் செய்ய இயலாது.*

*உம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே உலகத்தின் மீட்பர் என்று நான் நம்பி, என் வாயினால் அறிக்கையிடுகிறேன். என்னுடைய எல்லாப் பாவங்களையும் ஏற்றுக்கொண்டு, அதற்கான கிரயத்தை செலுத்தி சிலுவையில் எனக்காக மரித்தார். நீர் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினீர் என்று என் இதயத்தில் விசுவாசிக்கிறேன்.*

*நீர், என்னுடைய பாவங்களை மன்னிக்கும்படி வேண்டுகிறேன். நான் இயேசுவை என்னுடைய ஆண்டவராக அறிக்கையிடுகிறேன். உம்முடைய வசனத்தின்படி நான் இரட்சிக்கப்பட்டேன், உம்முடன் நித்தியத்தைக் கழிப்பேன். பிதாவே! உமக்கு நன்றி!*

*நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

யோவான் 3:16; எபேசியர் 2:8,9 ரோமர் 10:9,10; 1 கொரிந்தியர் 15:3,4; 1 யோவான் 1:9; 4:14-16, 5:1,12,13 பார்க்கவும்.

# ஆசிரியரைப் பற்றி

ஜாய்ஸ் மேயர் அவர்கள் உலகப்பிரசித்திப்பெற்ற வேதாகமப் போதகர்களுள் ஒருவராவார். நியூயார்க் டைம்ஸின் சிறப்பாக விற்பனையாகும் ஆசிரியரான அவருடையப் புத்தகங்கள், பலலட்சக்கணக்கானவர்கள் இயேசுக் கிறிஸ்துவின் மூலம் நம்பிக்கையையும், மீட்பையும் கண்டடைய உதவியுள்ளன. ஜாய்ஸ் மேயர் ஊழியங்களின் மூலம் பல தலைப்புகளைப் பற்றி அவர் போதிக்கின்றார், அதில் மனம், வாய், மன நிலை, மனப்பான்மை ஆகியவற்றிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அவர் போதிக்கின்றார். அவருடைய வெளிப்படையான உரையாடும் நடையானது, அவருடைய தனிப்பட்ட அனுபவங்களை வெளிப்படையாகவும், நடைமுறைக்கேற்றப்படியாகவும் பகிர்ந்துக் கொள்ள உதவுகிறது.இதனால் கேட்கிறவர்கள் அவர் என்ன வாழ்க்கையில் கற்றுக் கொண்டாரோஅதை அவர்கள் வாழ்க்கையில் அப்பியாசப்படுத்த ஏதுவுண்டாகிறது. ஜாய்ஸ் அவர்கள் சுமார் 100 புத்தகங்களை எழுதியுள்ளார். அவை 100 மொழிகளில் மொழிப்பெயர்கப்பட்டுள்ளது. அவர் ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ பன்னிரெண்டு உலகளாவிய மற்றும் உள்நாட்டு கருத்தரங்குகளை நடத்துகின்றார், இதன்மூலம் மக்கள் தங்கள் அனுதின வாழ்க்கையை அனுபவிக்கப் போதிக்கின்றார். கடந்த 30 ஆண்டுகளாக ஆண்டுதோறும் நடைபெறும் அவருடைய பெண்கள் கருத்தரங்குக்கு சுமார் 20 லட்சம் பெண்கள் உலகெங்கிலுமிருந்து கலந்துக் கொள்கின்றனர். கஷ்டப்படும் மக்களுக்கு உதவ வேண்டுமென்ற ஜாய்ஸின் வாஞ்சை தான் “நம்பிக்கையின் கரம்” என்ற தரிசனத்திற்கு அஸ்திபாரமாக அமைந்திருக்கிறது, இது ஜாய்ஸ் மேயர் ஊழியங்களின் ஊழியப் பணி கிளையாகும், இது அவருடைய ஊராகிய செயின்ட் லூயிலும் உலகின் பல்வேறு இடங்களிலும் நடைபெறும் அருட்பணிகளை தாங்கிவருகின்றது.

To contact the author in the United States, please write:
Joyce Meyer Ministries
P.O. Box 655,
Fenton, Missouri 63026
or call: (636) 349-0303
or log on to: www.joycemeyer.org

To contact the author in India, please write:
Joyce Meyer Ministries
Nanakramguda,
Hyderabad - 500 008
or call: 2300 6777
or log on to: www.jmmindia.org